பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 01 செவ்வாய்க்கிழமை (15-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:203

## ஜெனரேட்டர் மற்றும் உபகரணங்களை கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்லத் தடை!

### மின்சாரம் வழங்கும் திட்டத்துக்குப் பின்னடைவு

யாழ்ப்பாணம்,ஜூன்15

கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஜெனரேட்டர் மற்றும் உபகரணங்களை அங்கு எடுதது்செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த உபகரணங்களை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்துச்செல்ல படையினர் அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் (கார்ப்) கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கை மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு நடவடிக்கையாக மின்சாரம் வழங்கத் தேவையான ஜெனரேட்டர் கடந்த மாதம் 30 ஆம் திகதி மின்சாரசபைப் பணியாளர்களால் யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துச்செல

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நிதித்துறையினர் திடீர்ச்சோதனை: காலாவதியான பொருள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்15

தமிழீழ நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேற்று அச்சுவேலிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கைப்பற்றினர்.

அச்சுவேலி, ஆவரங்கால் மற்றும புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள 10 கடைகளில் இத்திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அங்கிருந்த பால்மா வகைகள், பிஸ்கட், ஜாம் மற்றும் சோடா போன்ற பொருள்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் விரைவில் மக்கள் முன்னிலையில் அழிக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திடீர் சோதனை நடவடிக்கைகள் பரவலாக மேற்கொள்ளப்பட

(14 ஆம் பக்கம் பார்க்க)

### பெண் போராளிகளைச் சோதனையிட ஆட்சேபம் தெரிவித்ததால்

# மன்னாரில் பொதுமக்கள் மீது சீருடையினர் கடும் தாக்குதல்!

## 4 பேர் காயம்; கடை, வான் சேதம்!!

மன்னார்,ஜூன்15

**மன்னாரில் பெண் போராளிகள் இருவரை இராணுவத்தினர் வழிமறித்துச் சோதனையிட முயன்றனர். இதற்குப் போராளிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். அப்போது அந்தப் போராளிகளுக்கு ஆதரவாகத் திரண்டு ஆட்சேபம் தெரிவித்த பொதுமக்கள்மீது சீருடையினர் தாக்குதல் நடத்தினர்.**

**நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 4 பொதுமக்கள் காயமுற்றனர். கடை ஒன்றும் வானும் சீருடையினரால் சேதமாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.**

இந்தச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:-

நேற்றுப்பிற்பகல் விடுதலைப் புலிகளின் அரசியல்துறையின் மகளிர் பிரிவைச் சேர்ந்த இரு பெண் போராளிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களில் உயிலங்குளம் சோதனைத் தடை நிலையம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வந்தனர். அப்போது அவர்கள் கடமையிலிருந்த பொலீஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதையடுத்து தொடர்ந்து மேலே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார் நோக்கிப் புறப்பட்ட அவர்கள் இருவரும் அங்கிருந்து மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றின் சாரதியிடம் தமது பொதிகளை ஒப்படைத்துவிட்டு தனித்து மோட்டார் சைக்கிளில் மன்னாரைச் சென்றடைந்தனர்.

மன்னார் நுழைவாயிலில் பெற்றோல் நிலையச் சந்திக்கு அண்மையில் வைத்துத் தமது பொதிகளை ஓட்டோவிலிருந்து அவர்கள் பொறுப்பேற்றனர்.

இதனை அவதானித்த பெற்றோல நிலையத் தடை முகாம் இராணுவத்தினர் அந்தப் பொதிகளைச் சோதனையிட முயன்றனர். ஆனால், பெண் போராளிகள் இருவரும் அதற்கு அனுமதிக்கவில்லை.

தங்களுடைய பொதிகள் ஏற்கனவே உயிலங்குளம் தடைமுகாமில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும், அவற்றைச் சோதனையிடும் அதிகாரம் இராணுவத்துக்கு இல்லை என்றும் போராளிகள் ஆட்சே

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் படையினர் நேற்றுச் சோதனை நடவடிக்கை

மட்டக்களப்பு,ஜூன்15

நேற்று விடிகாலை முதல் சில மணி நேரம் மட்டக்களப்பு நகரின் பல இடங்களிலும் இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர்.

நகரில் உள்ள ரெலோ அலுவலகமும் பலத்த தேடுதலுக்கு உள்ளானது.

தேடுதல் நடந்த சமயம் ரெலோவின் செயலாளர் நாயகம் பிரசன்னா அங்கு இருந்தார்.

நீதிமன்ற உத்தரவைச் சமர்ப்பித்தே இத்தேடுதலில் படையினர் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல வீடுகள், பொது இடங்கள் என்பனவும் துருவித்துருவிச் சோதனை செய்யப்பட்டன.

ஆயுதங்கள் பதுக்கி வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே இச்சுற்றிவளைப்பில் படையினர் ஈடுபட்டனர் என்றும் -

எனினும், நேற்றைய தேடுதலில் ஆயுதங்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## மாவீரர் லெப். கேணல் கில்லரியின் நினைவுக்கல் திரை நீக்கம்


யாழ்ப்பாணம்,ஜூன்15

சர்வதேச கடற்பரப்பில் 2003 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் கில்லரி அல்லது முருகேசன் (கணேசன் சிவகுருநாதன் - ஆனைக்கோட்டை) என்ற மாவீரரின் நினைவுக்கல் நேற்றுக் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில திறந்துவைக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் லெப்கேணல் கில்லரியின் பெற்றோர் ஈகச்சுடரை ஏற்றினர். பின்னர் மாவீரரின் திருவுருவப்படத்துக்கு அவரது தாயார் மலர்மாலை அணிவித்தார். மாவீரரின் தந்தையார் சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து மாவீரரின் நினைவுக்கல்லை பெற்றோர் திரைநீக்கம செய்துவைத்தனர்.

கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழவன் தலைமையில நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கடற்புலிகளின் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் அஞ்சலியுரையை நிகழ்த்தினார்.

'நிதர்சனப்' பொறுப்பாளர் சேரலாதன், யாழ்தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர். (ஒ-ரி)



சர்வதேச கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் கில்லரியின் நினைவுக்கல் திரைநீக்க நிகழ்வில் திருவுருவப்படத்துக்கு மாவீரரின் தந்தையார் சுடர் ஏற்றுவதையும் தாயார் மலர் மாலை அணிவிப்பதையும் மேல் இரு படங்களிலும் நினைவுக்கல்லுக்கு மலரஞ்சலி செலுத்தப்படுவதைக் கீழுள்ள படத்திலும் காணலாம்.

## வடக்கு - கிழக்கு மீள் குடியமர்வுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியுதவி

கொழும்பு,ஜூன்15

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களையும், அகதிகளையும் மீளக் குடியமர்த்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் 80 கோடி ரூபா நிதியுதவி வழங்கவுள்ளது.

இதற்கான உடன்பாட்டு ஒப்பந்தம் இன்று முற்பகல் 11 மணிக்கு நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சில் கைச்சாத்திடப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவரும், நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் செயலாளர் எம்.எஸ்.ஜயசிங்கவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவர் என அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.ஐ.எஸ். அஹமட் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்தவர்களில் 3 லட்சம் குடும்பங்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த 240 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 140 கோடி ரூபா நிகோட

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உடதலவின்ன படுகொலை வழக்கு: அனுருத்த கோரிக்கை நிராகரிப்பு


உடதலவின்னவில் 10 பேர் படுகொலையான சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளை நடத்திவரும மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழுவின் தலைமை நீதிபதியை விசாரணை நடத்துவதில் இருந்து நீங்கிக்கொள்ளுமாறு பிரதிவாதிகள் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் பிரதான பிரதிவாதி முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை ஆவார். இவரின் சட்டத்தரணி ரெண்ட் வலலியத்தவே இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

உடதலவின்ன வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அனுருத்த ரத்வத்த சார்பில் ஆஜரான சட்டத்தரணி, பிரதிவாதிக்குச் சாதகமாக சாட்சியங் கூறும் சாட்சிகளுக்கு நீதிபதிகள் குழுவின் தலைவர் எரிக்பஸ் நாயக்கா அறிவுறுத்தல்களை விடுத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் தமது கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தொடர்ச்சியான சேவைநிறுத்தப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தனர். அப்போது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.தங்கராசா ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுவதையும் பல்கலைக்கழக வளாகத்தில் காணப்பட்ட பதாகைகளில் சிலவற்றையும் படங்களில் காணலாம். *(படங்கள்:அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# யாழ்.பல்கலை ஊழியர்கள் நேற்றுமுதல் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்பல்கலைக்கழகக் கல்வி சார ஊழியர்கள் நேற்றுமுதல் தொடர்சேவை நிறுத்தப் போராட்டத்தில் குதிதத்துள்ளனர்.

தமது கோரிக்கைகளை நிர்வாகம் நிறைவேற்றும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்றும் -

போராட்டத்தின் ஆரம்பநிலையில நீர்வழங்கல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் பணியில் ஈடுபட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் - ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

ஊழியர் நியமனங்கள், கொடுப்பனவுகள், பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றவை என்று கூறப்படும் மோசடிகள் போன்ற விடயங்களை முன் வைத்தே ஊழியர்கள் சேவை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, வெளிவாரிப் பட்டப் படிப்பு கலைமாணி பகுதி I பரீட்சையின் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகள் நேற்று வெளியாகும் என்று முனன் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கல்விசாரா ஊழியர்களின் சேவை நிறுத்தப் போராட்டத்தால் அந்த முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. (ஒ-6)

## வள நிலையம் திறப்பு

குடாநாட்டில் 'றீடோ' நிறுவனம் நோர்வே நாட்டில் நிதியுதவியுடன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அமைத்த வள நிலையம் இன்று காலை 10 மணியளவில் திறந்து வைகக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு உதவிப் பிரதேச செயலாளர் கே.இராசதுரை கலந்துகொள்கிறார்.

கல்வியில் அடைவு மட்டம் குறைந்த மற்றும் பொருளாதார ரீதியில் வளம் குறைந்த மாணவர்களின் கல்வி நிலையை விருத்தி செய்வதற்காகக் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் இந்த வளநிலையம்மூலம் இலவசமாகப் பயிற்றுவிக்கப்படவுள்ளதாக திட்ட இணைப்பாளர் கே.கஜன் தெரிவித்துள்ளார். (ஒ-9)

## இன்றைய கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்15

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினருக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 5 மணிக்கு வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் யாழ்.நகரில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணிக்கு ஆதரவு வழங்குவது குறித்து இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் -

சங்கத்தின் யாழ்.மாவட்ட சகல கிளைச் செயலாளர்கள், வலயச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகளை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் -

மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (ஒ-9)

✪ ✪ ✪

தென்மராட்சி,ஜூன்15

தென்மராடசிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

கைதடி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் அந்தந்தப் பிரிவு அதிபர்கள், ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-117)

# அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தமிழ்ச்செல்வன் இன்று பேச்சு

வடக்குக் கிழக்கில் பணியாற்றும் அனைத்துச்சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் ஐ.நா.முகவர் அமைப்புகளுக்குமான கலந்துரையாடல் இன்று கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் இக்கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொள்கிறார்.

இச்சந்திப்பின் போது வடக்கு கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை குறித்தும், எதிர்காலச் செயற்பாட்டு வரைமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (ஒ)

# 'கசூரினா'வில் சேஷ்டை புரிந்த ஏழு இளைஞர்கள் கைதாகினர்!

காரைநகர்,ஜூன்15

காரைநகர் கசூரினா கடற்கரையில் மோதலில் ஈடுபட்ட ஏழு பேர் நேற்று முன்தினம் மாலை பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கசூரினா கடற்கரைக்கு சுற்றுலா மேற்கொண்டு வந்த இளைஞர்கள் சிலர் அங்கு வந்த பெண்கள் மீது மண்களை அள்ளிவீசி சேஷ்டை புரிந்தனர் என்றும் -

அதனைத் தட்டிக்கேட்க முயன்ற பொதுமக்களை அந்த இளைஞர்கள் தாக்கினார்கள் என்றும் -

கூறப்படுகிறது.

அங்கு காவல் கடமையில் ஈடுபட்ட பொலீஸார் இச்சம்பவத்தையடுத்து மேலதிகப் பொலீஸாரைக் கடற்கரைக்கு வரவழைத்தனர். அவர்கள் அங்கு மோதலில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் ஏழு பேரைக் கைது செய்தனர். பின்னர் அவர்கள் 7 பேரும் மேலதிக விசாரணைக்காக ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

கசூரினா கடற்கரையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் உல்லாசப் பயணிகள் அதிகம் வரும் வார இறுதி நாள்கள் மற்றும் விடுமுறை தினங்களில் இப்பகுதியில் பொலீஸார் காவல் கடமையில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-73)

# அமெரிக்கக் கருத்தமர்வில் யாழ்.அரச அதிபர் பங்கேற்பு

அமெரிக்காவில் நாளை ஆரம்பமாகவிருக்கும் உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பான மூன்று நாள் கருத்தமர்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பங்குபற்றுகின்றார்.

உள்ளூராட்சி நிர்வாகத்தை நவீன முறையில் மேற்கொள்வது தொடர்பாக ஆராயும் இந்தக் கருத்தமர்வில் சர்வ தேச நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இருந்து யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் எஸ்.சந்திரபாலாவும் இதில் கலந்துகொள்கின்றனர்.

இருவரும் நேற்றிரவு அமெரிக்கா புறப்படவிருந்தனர். (ஒ-3)

# மட்டு.ரயில்வே ஊழியர் திடீர் வேலைநிறுத்தம்

நேற்றுக் காலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரை மட்டக்களப்பு ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

14 வருட காலமாக தற்காலிக நியமனத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று கோரியும் புதிய ஊழியர்களின் நியமனத்தையும் நிரந்தர மாக்கலை எதிர்த்தும் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் காலை 8 மணிக்கு கொழும்பு நோக்கிச் செல்லவிருந்த ரயில்தாமதமாக 9 மணியளவிலேயே புறப்பட்டது.

வேலை நிறுத்தம் குறித்து கேள்விப்பட்டு அங்கு விரைந்து சென்ற தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, ரயில்வே பொது முகாமையாளருடன் பேச்சு நடத்தினார்.

சம்பந்தப்பட்ட ஊழியர்களின் கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பில் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் சந்திப் பொன்றை மேற்கொள்ளத் தாம் ஏற்பாடு செய்து தருவார் என எம்பி. ஜெயானந்தமூர்த்தி ஊழியர்களுக்கு உறுதியளித்துள்ளார். (க)

# இளைஞர், யுவதிகளுக்கு வழிகாட்டுவனவாக பொது அமைப்புக்கள் திகழ்வது அவசியம்!

## யாழ்.மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் உரை

இளைஞர்கள், யுவதிகளை நல் வழிப்படுத்தி வழிகாட்டுவனவாக பொது அமைப்புக்கள் திகழ வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி கயல்விழி.

அண்மையில் நடைபெற்ற யாழ்நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தி னராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத் தலைவர் சி.பிரேமதாஸன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

இன்று முற்றுப்பெறாத நிலையில் உள்ள சமாதானக் காலத்தை நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டிவிட்டதாகக் கருதி இன்றைய இளம் சமூகத்தினர் தவறான செயல்களில் ஈடுபட்டு எமது கலாசாரத்தை அழிக்கும் நிலைக்குச் செல்கின்றனர். இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இந்த நிலையை மாற்ற அந்த அந்தப் பகுதிப் பொது அமைப்புக்கள இளைஞர், யுவதிகளுக்கு அறிவு, ஒழுககம், ஆன்மீகம் போன்ற போதனைகளை ஊட்டி அவர்களை தீயவழிக்குச் செல்லவிடாது நல்வழிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில், சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், ஆலயங்கள் போன்ற பொது அமைப்புக்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும்.

குடாநாட்டிலே இளம் சந்ததியினிடம் கலாசாரச் சீரழிவை ஏற்படுத்தத் தீய சக்திகள் முயற்சிக்கின்றன. அந்த முயற்சிகளைப் பொது அமைப்புக்கள் தடுக்கவேண்டும்.

ஒரு குழந்தை பிறந்து வளரும் போது அந்தச் சமூகத்திலே நல்ல பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கு உள்ளது. அதே அளவு பொறுப்பு பொது அமைப்புக்களுக்கும் உள்ளது என்பதை மறக்கக்கூடாது. - என்று தெரிவித்தார்.

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

அரசும் ஜனாதிபதியும் சமாதான முயற்சியில் இரட்டைவேடம் பூண்டு தமிழ்மக்களின் பிரச்சினையை இழுத்தடிக்கும் நிலையே தற்போது காணப்படுகின்றது.

தமிழ்மக்களின் பிரச்சினைகளை புலிகளுடன்தான் பேசித் தீர்க்கவேணடும் என்று வெளிநாடுகளுக்குக்கூறி, நிதியுதவிகளைப் பெறும் நோக்குடன் கபடநாடகமாடிக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

அதேநேரம், மறுபுறத்தில் கிழக்குப் பகுதியில் சமாதானச் சூழலைக் குழப்பும் பொருட்டு பல தீய சக்திகளுடன் இராணுவத்தினரும் இணைநது பல படுகொலைகளை நடத்த ஒத்தாசை நல்கிவருகிறார்.

இந்த இரட்டை வேடங்கள் எம்மைப் பொறுத்தவரை புதிதல்ல. தமிழ் மக்கள் இன்று நேற்றல்ல கடந்த பல ஆண்டு காலமாக மாறி மாறி வரும் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாரா நிலையில் இருந்த ஜனாதிபதி, பேச்சுக குறித்த இடைக்கால நிர்வாகத் தன்னாட்சி அதிகார விடயத்தில் இழுத்தடித்து வருகின்றார்.

எமது மண்ணிலே புனர்நிர்மாண கட்டுமானப் பணிகள் நிறைய உள்ளன. பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற நாள்கள் நீடிக்கும் நிலையில் நாம் அதிகாரத்துடன் எமது பிரதேசத்தை மீளவும் கட்டியெழுப்ப எமக்கு அதிகாரம் கொண்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் தேவை. அதனாலேயே இடைக்கால அதிகாரசபையை வலியுறுத்துகிறோம்.

இவை எல்லாவற்றையும் அரசு இழுத்தடித்து யுத்தம் ஒன்றை மீண்டும எமது மக்கள மீது திணித்தால் அதற்கான சகல பொறுப்புக்களையும் அரசும் ஜனாதிபதியும் ஏற்கவேண்டும்.

இன்று அரசியல் நிலை மாறியுள்ளது. தென்னிலங்கையில் ஜே.வி.பியுடன் ஜனாதிபதி இணைந்துள்ளார். அந்தவகையில் முடிவுகள் எப்படி அமையும் என்பதை மக்களாகிய நீங்கள் ஆழமாகச் சிந்தித்து விழிப்புடன் இருக்க வேண்டும். - என்றார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை நலலூர் பாலகதிர்காமத்தின் பிரதம குருக்கள் குமாரக்குருக்கள் வழங்கினார்.

சனசமூக நிலையத்தின் போசகா சி.வி.கே. சிவஞானம், அரச சார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த ரி.பற்றிக், கிராம உத்தியோகத்தர்களான எஸ். சண்முகநாதன், எஸ்.லக்சுமிகாந்தன், சங்கத்தின் செயலாளர் கு.சசிகர சர்மா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

ஆண்டுவிழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.இறுதியில் கலைநிகழ்வுகள் இடமபெற்றன. (ஒ-4-180)

# எம்.பிக்கள் ரிஷாத், நஜீப்புக்கு மீண்டும் மு. காங்கிரஸில் இடம்?

## மக்காவில் சத்தியம் செய்வராம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட - சர்ச்சைக்குரிய - நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், நஜப் ஏ.மஜீத் ஆகியோரை மீண்டும் கட்சியில் சேர்த்துக கொள்வதில் ஒருசாரார் ஈடுபட்டிருக்கும் அதேசமயம் அம்முயற்சியால் கட்சிக்குள் 'லடாய்' ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கட்சிக்கும், கட்சியின் தலைமைக்கும் அகௌரவம் ஏற்படும் வகையில் சதித்திட்டங்களில் ஈடுபட்ட இவ்விருவராலும் கட்சிக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இவர்களை மீண்டும் கட்சியில் சேர்ப்பதைத் தாம் விரும்பவில்லை என ஒரு சாரார் போர்க் கொடி தூக்கி உள்ளனராம்.

இவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். தாம்விட்ட தவறுகளுக்காகக் கட்சியின் அதி உயர் அரசியல் பீடத்தின் முன் அவர்கள் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் அவர்களை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கூறுகின்றனர்.

அதேவேளை, ஆளும் கட்சியன ரும் இவர்களைக் கைவிட்டு விட்டதால், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருடன இவ்விருவரும் நேரடியாகவே கதைத்துள்ளனர் என்றும் இதன் அடிப்படையில் தலைவர் ரவூப் ஹக்கீமும் இவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கலாம் எனப் பெருந்தன்மையுடன் கூறியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இவ்விடயங்களை ஸ்ரீல.காங்கிரஸின் அதி உயர் அரசியல் பீடம் மிகவும் அவதானமாகப் பரிசீலனை செய்துவருகின்றது என்றும் தெரிகின்றது.

மேலும் சர்ச்சைக்குரிய இவ்விரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலைவர் ஹக்கீம் சகிதம் புனித மக்காவுக்குச் செல்லவிருக்கின்றனர் என்றும் -

அங்கு புனித குர்ஆனில் சத்தியம் செய்து தமது தவறுக்கு மன்னிப்புக் கேட்டு இனிமேல் இவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்கள் என்று உறுதியுரை எடுப்பார்கள் என்றும் -

இதற்கான ஏற்பாடுகள் மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் -

ஒரு தகவல் தெரிவித்தது. (க)

# ஆஸ்திரேலிய கண்காட்சியில் பூலான் தேவியின் படம்

மெல்போர்ன,ஜுன்15

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன நகரில் ஒரு வித்தியாசமான கண்காட்சி அமைத்திருக்கிறார்கள். இந்தக் கண்காட்சியில் ஒரு பகுதி உலகின் பல்வேறு குற்றங்கள் புரிந்து பிரபல மானவர்களின் படம்,' வாழ்க்கை வரலாறு ஆகியவையும் இடம்பெற்றுள்ளது.

மக்கள் மத்தியில் இடம்பெற்ற தலைவர்கள், அரசை எதிர்த்துப் போராடிய தலைவர்களின் படங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்தியாவில் கொள்ளைக்காரியாக இருந்து பிறகு சரண் அடைந்து திருந்தி வாழ்ந்து எம்.பியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பூலான்தேவியின் படம், வாழ்க்கை வரலாற்று குறிப்புகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இதைப் பார்க்கத்தான் கூட்டம் அலைமோதுகிறது.

(8)

# அமெரிக்காவால் தேடப்படும் தீவிரவாதியை கோட்டைவிட்டனர் கென்யப் பொலீஸார்

மும்பாசா,ஜுன்15

அமெரிக்காவினால் தேடப்படும் பயங்கரவாதியை, சரிவர அடையாளம் தெரியாமல் கோட்டைவிட்டது கென்யப் பொலீஸ்.

அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தவர் பசல் அப்துல்லா முகமது. கிழக்கு ஆபிரிக்கப் பகுதியில் அல்கெய்டாவின் தலைவராகச் செயற்பட்டு வந்தார்.

ஏற்கனவே திருடப்பட்ட கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி நகை வாங்க முற்பட்டபோது, இவரை மும்பாசாவில் பொலீஸார் வெள்ளிக்கிழமை கைதுசெய்தனர். ஆனால் பொலீஸாரின் பிடியிலிருந்து சனிக்கிழமை தப்பிவிட்டார் பசல்.

திருடப்பட்ட பொருள்களைக் கைப்பற்றுதவற்காக பசலின் வீட்டுக்குப் பொலீஸார் சென்றனர். அப்போது விலங்கால் பசல் பிணைக்கப்படவில்லை. அந்த இடத்திலிருந்த பெண்களும் மனநிலை சரியில்லாத ஒருவரும் பொலீஸாரிடம் வாக்குவாதம் செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏ.கே. 47 துப்பாக்கிகளையும் பிஸ்டல்களையும் தாக்கியிருந்த 7 பொலீஸாரையும் ஏமாற்றிவிட்டு தப்பினார் பசல். குரங்குபோல் தாவி கதவருகே சென்றார். அவர் முறையான பயிற்சி பெற்றவர் என்பதை உணர முடிந்தது. மின்னல் போல மறைந்துவிட்டார் என்றார் ஒரு பொலீஸ்காரர்.

அதன்பிறகுதான் பசல் ஒரு அதிபயங்கரவாதி என்பதும் கிழக்கு ஆபிரிக்காவில் 1998இல் அமெரிக்க தூதரங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளுக்காகத் தேடப்படுவர் என்பதும் தெரியவந்தது.

அவரைப் பிடித்துத் தருபவர்களுக்கு 112 கோடி ரூபா கோடி பரிசாக வழங்கப்படும் எனவும் அமெரிக்கா அறிவித்திருந்தது.

பசல் தங்கள் வசம் இருந்தபோது சரிவர அடையாளம் காணாமல் விட்டுவிட்டனர் கென்யப் பொலீஸார். இத்தனைக்கும் கென்யப் பொலீஸ் நிலையச் சுவர்களில் பல ஆண்டுகளாகப் பசலின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

ஓராண்டுக்கு முன்பும் பசல் கைது செய்யப்பட்டு, இதேபோல் அடையாளம் தெரியாமல் விடப்பட்டுள்ளார்.

(8)

## இடைக்கால அரசு கைமாறவுள்ள நிலையில் தாக்குதல்கள் தீவிரம்

# பக்தாத்தில் நேற்றும் வெடித்தது குண்டு 5 வெளிநாட்டவர் உட்பட 12 பேர் பலி!

பக்தாத்,ஜுன்15

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தின் மத்திய பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கார்க் குண்டுத் தாக்குதலே நடத்தப்பட்டது என்று அதிகாரிகள் கூறினர். உயிரிழந்தவர்களில் ஐவர் வெளிநாட்டினர் என்று இடைக்கால அரசின் பிரதமர் அல்லாவி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாபிர் சதுக்கம் பகுதியில் குண்டு வெடித்தது. இதில் கட்டடம் ஒன்று முற்றாக அழிந்தது. சன நெரிசல் மிகுந்த காலை நேரத்தை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களில் பக்தாத்தில் நடக்கும் இரண்டாவது குண்டுத் தாக்குதல் இது. எதிர்வரும் 30ஆம் திகதி ஈராக் அதிகாரம் அமெரிக்காவிடம் இருந்து கைமாறப்படவுள்ள நிலையில் தாக்குதல்களின் தீவிரம் அதிகரித்துச் செல்கிறது என்று அமெரிக்க மற்றும் ஈராக்கிய அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.

நேற்றைய குண்டுத் தாக்குதல் தொடர்பாக முரண்பாடான தகவல் தெரிவிக்கப்படுகின்றன. அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து ஒரு குண்டு பொருத்தப்பட்ட கார் நிறுத்தப்பட்டிருந்தது என்று ஒரு தகவல் தெரிவித்திருந்தது.

அதேசமயம், சிறிய 'வோக்ஸ் வோகன்' ரக காரில் வந்த தற்கொலைக் குண்டுதாரி கார்களின் நடுவே சென்று குண்டை வெடிக்க வைத்தார் என்று அந்த இடத்திலிருந்த பொலீஸ் அதிகாரியான மேஜர் மொஹெமட் சாலே தெரிவித்தார். இது தற்கொலைத் தாக்குதல்தான் என்று மற்றொரு அதிகாரியும் கூறினார்.

ஆனால், மேலும் சில வட்டாரங்கள், கார் அதன் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட பின்னர் 'ரிமோர்ட் கொன்ரோல்' மூலம் இயக்கி வெடிக்க வைக்கப்பட்டது என்று கூறுகின்றன.


சன நெரிசலான நேரத்தில் குண்டு வெடித்ததால் காயமடைந்தவர்கள் உடனடியாக வீதியால் வந்த வாகனங்களில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தீக்காயங்களுடனும் கைகளை இழந்தபடியும் பலர் தமது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் இருந்த இஸாம் அலி நரம்பியல் வைத்தியசாலை மருத்துவர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து சாதாரண மக்களின் கோபம் அமெரிக்கப் படையினர் மீது திரும்பியுள்ளது. ஆத்திரமடைந்தவர்கள் எரிந்து கொண்டிருந்த வாகனங்களின் பாகங்களை உதைத்துத் தள்ளியதுடன், 'கடவுள் மேலானவர்', 'அமெரிக்கா வீழ்க' என்று கோஷங்களை முழங்கினர். அவர்கள் வாகனங்களைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அவர்களைக் கலைப்பதற்கு ஈராக்கியப் பொலீஸார் வான் நோக்கிச் சுடவேண்டியதாயிற்று. பக்தாத்தில் உள்ள அமெரிக்க முகாம் ஒன்றின் அருகே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதில் 7 பேர் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்று ஒரு நாளின் பின்னர் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

(8)





## சனிக்கிரகத்தின் துணைக் கோள்; படம் வெளியீடு

சனிக்கிரகத்தின் துணைக் கிரகமான போபியைப் படம் எடுத்து அனுப்பி வருகிறது அமெரிக்க விண்கலமான காசினி.

சூரியக் குடும்பத்தில் இரண்டாவது பெரிய கிரகம் சனி. சூரியனிலிருந்து 88 கோடி மைல்களுக்கு அப்பால் சுற்றிவரும் சனியைப் பற்றி ஆராய அமெரிக்காவின் நாஸா விண் ஆராய்ச்சி மையம் காசினி என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது.

நான்கு ஆண்டு காலம் சனிக்கிரகத்தின் சுற்றுவட்டப் பாதையை ஆராயும் காசினி, சனிக்கிரகத்தின் 31 துணைக் கோள்களைப் பற்றிய தகவல்களையும் ஆராய்ந்து வருகிறது. சமீபத்தில் சனிக்கிரகத்தின் சந்திரனான போபியை காசினி விண்கலம் படம் எடுத்து அனுப்பியுள்ளது.

# ஆளுங்கட்சிகள் தோல்வி எதிர்க்கட்சிகள் வெற்றி!

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் முடிவில் மாற்றம்

பாரிஸ்,ஜுன்15

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுக்கு வெற்றியும் ஆளும் கட்சிகளுக்கு தோல்விகளும் ஏற்பட்டுள்ளன.

ஜேர்மனி, பிரான்ஸ், போலந்து ஆகிய நாடுகளில் ஆளும் கட்சிகள் பெரும் தோல்விகளை சந்தித்துள்ளன.

அதேசமயம், ஐரோப்பிய ஒன்றியததில் நம்பிக்கையில்லாத கட்சிகள் அதிக வெற்றிகளைக் கண்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தை முழுமையாக எடுத்துக்கொண்டால் வாக்களிப்பு 44.2 வீதமே இருந்துள்ளது.

புதிய ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் மத்திய வலதுசாரிக் கட்சிகள் தனிக் குழுமமாகத் தெரிவுசெய்யப்படுவார்கள் என்று விமர்சகர்கள் தெரிவித்திருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு மாறான கட்சிகள் பிரிட்டனில் மட்டுமன்றி போலந்திலும் ஆசனங்களை வெல்லக் கூடும். டென்மார்க், சுவீடனிலும் அவர்களுக்கு ஆசனங்கள் கிடைக்கலாம் என்று கருதப்படுகின்றது.

(8)

# அதிநவீன கார்

ஜேர்மன் நகரில் ஹாம்பர்க் நகரில் அதிநவீன கார்களின் கண்காட்சி நடநதது. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அதிநவீன கார்கள் கலந்து கொண்டன. இதில் பங்கேற்ற ஒரு கார் அனைவரது கவனத்தையும் கவர்ந்தது. அந்தக் காரில் எலக்ட்ரோனிக் கருவி, கொம்யூட்டர், மொபைல் போன், கமெரா ஆகியன அமைக்கப்பட்டு இருக்கிறதாம்.



இந்தக் கார் பல மீற்றர் தூரத்தில் வரும்போதே வீதியில் உள்ள மேடு பளளங்களைச் சாரதிக்கு உணர்த்துமாம். பள்ளி, கல்லூரி பகுதிகள் வரும்போது தானாகவே வேகம் குறைந்துவிடுமாம். சாரதி தூக்கக் கலக்கத்தில் இருந்தால் அலாரம் அடித்து எழுப்பிவிடுமாம். விபத்து எதுவும் நேர்ந்துவிட்டால் செயற்கைக் கோள் மூலம் தகுந்த இடத்திற்கு தகவல் அனுப்பிவிடுமாம். இந்தவகைக் காருக்கு தற்போது மவுசு அதிகரித்து உள்ளது.

(ரி)

# சவூதியின் தலைநகர் றியாத்தில் அமெரிக்கரைக் கடத்தியது அல்கெய்டா

சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் அமெரிக்கக் குடிமகன் ஒருவரைக் கடந்த சனிக்கிழமை கடத்திச் சென்றதாக அல்கெய்டா தீவிரவாத இயக்கம் அறிவித்துள்ளது.

கடத்தப்பட்ட மனிதரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உள்ளூர் அதிகாரிகளுடன் தீவிரமாக இறங்கியிருப்பதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்லாமிய இணையத்தளம் ஒன்றில் அறிக்கையையும், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர் அல்கெய்டா இயக்கத்தினர்.

அதில் கடத்தப்பட்டவரின் பெயர் பவுல் எம்.ஜான்சன் (வயது 49) என்றுள்ளது. இவர், போரில் பயன்படுத்தக்கூடிய விசேட ஹெலிகொப்டர்களை வடிவமைப்பதில் நிபுணராம். சவூதி அரேபியாவில் இத்தகைய ஹெலிகொப்டர்களை வடிவமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 4 நிபுணர்களில் ஜான்சனும் ஒருவராம்.

எமது இஸ்லாமிய சகோதரர்களுடன் குரூரமாக விளையாடும் அமெரிகர்களுக்குப் பாடம் புகட்டவே இக் கடத்தலை செய்துள்ளோம். எங்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும்வரை ஜான்சனை விடுவிக்க மாட்டோம் என்று அல்கெய்டாவின் அறிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் கிழக்கு சவூதி நகரான கோபரில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டை மற்றும் பிணைக்கைதிகள் சம்பவத்தில் 22பேர் கொல்லப்பட்டதற்கும் அல்கெய்டாவின் இதே குழுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

## கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

**சராசரிக் கடல்மட்டம் கடந்த 100 வருடங்களில் 10 தொடங்கி 25 சதம மீற்றர்களால் உயர்ந்துள்ளது. உலகின் பனிக்கட்டிகள் உருகுமானால் சமுத்திரங்கள் 66 மீற்றர்களால் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.**

# எமது பாரம்பரிய வைத்திய முறைகளை காலனித்துவத்தால் கூட அழிக்கமுடியவில்லை

## மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கருத்து

கொழும்பு,ஜூன்15

எம்மிடம் காணப்படும் பாரம்பரிய வைத்திய முறையை காலனித்துவ ஏகாதிபத்தியத்தாலும் அழிக்க முடியவில்லை. அது அவ்வளவிற்கு பழைமையானது. நெடுங்காலமாக சிதைவுறாமல் இருந்துவரும் ஒருமுறையாகும்.

அண்மையில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் திருமதி வசந்தி தேவராஜா, சிறீஸ்கந்தராஜாவினால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூல்கள் பற்றிய ஆய்வுக் கருத்தரங்கில் ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் ரியூலி டி.சில்வா கூறினார்.

கொழும்பு ஹோட்டல் ரேணுகாவில் இடம்பெற்ற இந்த ஆய்வரங்கில் டாக்டர் திருமதி சிறீஸ்கந்தராசாவினால் எழுதப்பட்ட மூலிகை மருத்துவ விஞ்ஞானம் (The Science of Herbel Drugs) மனித நடத்தையை விளங்கிக் கொள்ளல் (Understanding Human Behaviour) ஆகிய இரு புத்தகங்களும் ஆயவுக் கெடுத்துக் கொள்ளப்பட்டன.

சட்டபீடாதிபதி என்.செல்வக்குமாரன் தமது தலைமையுரையில் விரிவுரையாளர் வசந்தியின் நூல்களில் இரணடை வெளியிடுதல் என்பதை, தேசத்தின் அறிவூட்டலுக்கான அவரது முக்கிய பங்களிப்பாகவும் தேசத்திற்கு அவராற்றும் சேவையாகவும் கருதலாம் என்றார்.

பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் பேராசிரியர் பி.ஆர்.ஆர.என். மெண்டிஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆற்றிய உரையில் கலாநிதி வசந்தி சிறீஸ்கந்தராஜாவின் இரு நூல்களும் இளைய சமுதாயத்திற்கு மிகவும் பயன்தரக் கூடியதாக இருப்பதுடன் மற்றவர்களும் அவ்வழியிலே செயல்பட தூண்டும் என்றும் நான் எண்ணுகின்றேன் - என்றார்.

பேராசிரியர் ரியூலி டி.சில்வா மூலிகை மருத்துவ விஞ்ஞானம் எனற நூல் பற்றி ஆய்வுரை செய்யும் போது பின்வருமாறு கூறினார்.

மூலிகை மாத்திரை மற்றும் மாத்திரை தொடர்பாக ஆங்கிலத்தில் வெளிநாட்டவர்கள் எழுதியுள்ளார்களே தவிர இலங்கையர்கள் இதுவரை எழுதவில்லை. எனவே இவ்விடயம் பற்றி நூல் ஒன்றை எழுத இலங்கையர் ஒருவர் முயற்சி எடுத்திருப்பது இதுவே முதல்தடவை. எமது சொந்தத் தாவரங்கள் பற்றி நாம் அறிந்து கொள்வதற்கு வெளியேயிருந்துவந்த ஒருவரால் எழுதப்பட்ட நூல ஒன்றையே நாம் புரட்ட வேண்டியிருந்தது. இது ஓர் இடைவெளி. எமது சொந்தத் தாவர மூலவளங்கள் பற்றி வசந்தி எழுதிய நூலே இலங்கையர் ஒருவரால் எழுதப்பட்டதும் நான் சந்தித்ததுமான முதல் நூலாகும். இதற்காக நான் கலாநிதி வசந்தியை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

எம்மிடம் காணப்படும் வைத்திய முறையானது காலனித்துவ ஏகாதிபத்தியத்தாலும் அழிக்கமுடியாத அளவுக்கு பழைமையானதும் நெடுங்காலமாகியும் சிதைவுறாமலும் இருக்கும ஒரு முறையாகும். எனவே, இம்முறையில் விஞ்ஞானத்தை உட்புகுத்துவது காலத்தின் கட்டாயமாகும் - என்றார்.

மனித நடத்தையை விளங்கிக் கொள்ளல் டாக்டர் யசந்தா அரியரட்ணம் ஆய்வுரை செய்தார். அவர் கூறியதாவது:

ஒரு முக்கியமான விடயமாக மனித நடத்தை பொதுவாக எவரும் ஏற்றுக்கொள்ளாத போதும் இத்துறை மிகவும் முக்கியமானதென்பது எனது கருத்தாகும். நூலாசிரியரும் மருத்துவர்களாகையால் நாங்கள் சந்திக்கும் பல நோயாளிகளின் மனித நடத்தையைப் பற்றி மிகவும் அதிகமாக எடுத்து வைத்துள்ளோம். இந் நூலாசிரியர் பெரும்பாலும் சுயசிந்தனை பற்றியே வலியுறுத்தியுள்ளார். இதனை விளங்கிக் கொள்வது சற்று கடினமாகும். இது எம் எல்லோருக்கும் பாரமாகவே உள்ளது. நூலாசிரியர் என்னைப் போன்றே எமது அடுத்த சந்ததியினரின் நடத்தையைப் பற்றி கவனமாக கொண்டுள்ளார். ஆகவே, இந்நூலானது சமூகத்திற்கு உயரிய பயன் தரத்தக்கதொன்றாகும். எங்கள் தேவையைப் பற்றி மட்டும் கரிசனை கொள்ளாது பிறருடைய தேவைகளைப் பற்றி கவனம் செலுத்துவது மிகவும் முக்கிமானதென்பதை இந்நூல் திரும்பத் திரும்ப கோடிட்டு காட்டுகின்றது என்று கூறினார். (ப)



நூலின் வெளியீட்டு விழா ஆரம்ப வைபவத்தில் எடுக்கப்பட்ட படம்.

## விபுலானந்தர் தினம்

வலிகாமம் தெற்கு,ஜூன்15

தமிழுக்கும், சமயத்துக்கும் பணி புரிந்த விபுலானந்த அடிகளின் தினம் நாளை மறுதினம் 17ஆம் திகதி வியாழக்கிழமை பாடசாலைகளில் கொண்டாடப்படவுள்ளது.

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் விபுலானந்தர் தினவிழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விபுலானந்தர் வாழ்க்கை தொடர்பான சிறப்புரைகள், விசேட கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் என்பவற்றை பாடசாலைகளில் நடத்துவதற்கு ஆசிரியர்களும், மாணவர்களும் தயாராகி வருகின்றனர்.

(-8-152)

## இளவாலை மருந்தகத்துக்கு காணி ஒன்றைப் பெற உதவுமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஜூன்15

இளவாலை அரசினர் மத்திய மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் இளவாலைப் பகுதியில் பொருத்தமான காணியொன்றைப் பெறுவதற்கு பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

கடந்த பல வருடங்களாக தனியார் வீடு ஒன்றில் இந்த மருந்தகம் இயங்கிவருகின்றது. மருந்தகத்துக்கு நிரந்தரக் கட்டடத்தை கட்டுவதற்கான காணியை அன்பளிப்பாகவோ அல்லது விலையாகவோ வழங்குவதற்கு யாராவது முன்வந்தால் அதுதொடர்பாக இளவாலை அரசினர் மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொள்ள முடியும் என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (8-135)


### அகவை அறுபதில் தடம் பதிக்கும் தலைவன்

2004-06-15



**திரு. டானியல் முருகேசு வேதாபரணம்**

(கிராம அலுவலர்)

குடும்பத்தின் தலைவனாய் நின்று
அடுக்கடுக்காய்ப் பல செய்தாய்!
சமூகத்தின் தலைவனாய் நின்று
சாதனைகள் பல படைத்தாய்!
ஊரின் தலைவனாய் நின்று
பெயரையும் புகழையும் படைத்தாய்!

கிராமத் தலைவனாய் நின்று
பிரமாதமாய் சேவை செய்தாய்!
அணியின் தலைவனாய் நின்று
துணிவை வெளிக்காட்டினாய்!
துடுப்பாட்டச் சங்கத் தலைவனாய் நின்று
மிடுக்காகப் பதிலளித்தாய்!
உதைபந்தாட்டச் சங்கத் தலைவனாய் நின்று
இதயங்களைக் கொள்ளை கொண்டவனே!
வாழ்க வளமுடன், நீ வாழ்க பல்லாண்டு!!

- நிறைவேற்றுக் குழு,
பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்

(சி-35593)(26-11-18)



### சாரதி தேவை

*சாரதிப் பயிற்சியளிக்கக் கூடிய சாரதி ஒருவர் தேவை. இ.போ.சவின் முன்னாள் சாரதியாயின் முன்னுரிமை வழங்கப்படும்.*

**பிள்ளையார் லேணேர்ஸ்**
239, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி, 222 5844.

(33078)


வலிகாமம் கல்வி வலயத்தில்

## 15 பாடசாலைகளுக்கு 'யுனிசெவ்' உதவியுடன் குடிதண்ணீர், சுகாதார வசதிகள்

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள 15 பாடசாலைகளுக்கு இவ் வருடத்தில் யுனிசெப் நிறுவன உதவித் திட்டத்தின்கீழ் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கல்வித் திணைக்களத்தினூடாக பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் உதவியுடன் இவை நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

மாணவர்களின் குடிதண்ணீர் வசதிக்காக குடிதண்ணீர்த் தொட்டிகளை அமைத்துக் கொடுத்தல், நீர் இறைக்கும் இயந்திரங்கள் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மலசலகூடங்கள் அமைத்துக்கொடுத்தல் போன்ற செயற்றிட்டங்களை யூனிசெப் நிறுவனம் முன்னெடுக்கவுள்ளது.

ஏழாலை சைவ மகாஜனாக் கல்லூரி, அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, ஏழாலை றோ.க.த.க. பாடசாலை, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாசாலை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, உடுவில் மல்வம் றோ.க.த.க பாடசாலை, சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, நவாலி சைவ வித்தியாசாலை, நவாலி சென். பீற்றேர்ஸ் றோ.க.த.க.பாடசாலை, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை, மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை காங்கேய வித்தியாசாலை, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, மூளாய் அமெ.மி.த.க.பாடசாலை, சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே இவ்வாறான வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. (8-152)


### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.இ.கிருஷ்ணானந்தன்
அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னம்பலம் இராசரத்தினம்**

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(33071)(34-11-18)

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக ஆளணியினர், மாணவர்கள்.
யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.


### அழைப்புக் கட்டளை

இல 16 - பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல : மண.நீக்கம்/460

செல்லையா சுப்பிரமணியம்
மே/பா திருமதி யோகராஜன் மாலதி,
திருமணப் பதிவாளர்
உரும்பிராய் மருதனார்மடம் வீதி.
உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்.

- வழக்காளி

எதிராக

சுப்பிரமணியம் பெண் பிருந்தா
மே/பா கந்தசாமி கைம்பெண்
கைலேஸ்வரி,
பி.பிரேம்குமார் இல்லம்,
நாவலர் பாடசாலை ஒழுங்கை.
கோப்பாய் மத்தி.

- எதிர்வாதி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்வாதிக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி தனக்கும் உமக்கும் இடையே நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்வதற்காக.

இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2004 ஆம் ஆண்டு ஆனிமாதம் 21 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன்முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத் தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக்கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

| | |
|---|---|
| வரைந்தது | நீதிமன்றக் கட்டளைப்படி |
| பொன்.பூலோகசிங்கம் | து.சிறீமோகன் |
| வழக்காளியின் சட்டத்தரணி | பதிவாளர். மாவட்ட நீதிமன்றம். யாழ்ப்பாணம். |

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காகும் செலவை. மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம்: பதிவாளர் து.சிறீமோகன் (34-11-18-26)

*2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் நாளாகிய இன்று* (சி-33083)


### மரண அறிவித்தல்

**விநாயகமூர்த்தி (அப்பாப்பிள்ளை)**

**இராசரத்தினம்**

மல்லாகம், அப்பாவளவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் 3ஆம் கட்டையடியை வாழ்விடமாகவும் கொண்ட இராசரத்தினம் 2004.06.13 ஆம் திகதி கொழும்பில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரி அம்மாவின் அன்புக் கணவரும் சியாமளாதேவி, இராஜேஸ்வரி, வரதராஜன் (கண்ணன், ஜேர்மனி), யசோதா, தேவகி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மகாராசா (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (பாபு, ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜனசக்தி, கொழும்பு), தயாளன் (கனடா), ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் மாமனாரும் பிரசாந், கஜேந்திரன், டிவிக்சன், சர்மிளா, துஸ்யந்தி, நிவேதிகா, அபிராமி, சுஜீவன், சஞ்ஜீவன், சுறஞ்சன், தாரணி, அஞ்சலா, சுலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொறளை ஜெயரத்தின மலர்ச் சாலையில் 2004.06.17 வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

கொழும்பு முகவரி:
17A, பெர்னாண்டோ றோட்,
வெள்ளவத்தை,
தொலைபேசி இல. 2505182.
(33080) (26-11-18)

தகவல்:
நவரத்தினம் வேலும்மயிலும
(பேறாமகன்),
சிவகிரி வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு.

உதயன்

# போரா? சமாதானமா? சர்வதேச சமூகமே கூறு!

சமாதான முயற்சிகள் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி வெளியிட்டுவரும் கருத்துக்கள் 'சணம் பித்தம், சணம் வாதம்' என்பது போல மாறி மாறி எதிரொலிப்பதை இந்தப் பத்தியில் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம்.

இப்போது நாட்டு மக்களுக்குத் தாம் ஆற்றியுள்ள உரையில், சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்ற தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களும் அதேபோன்று கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள்.

*'ஜனாதிபதி வெளியிட்டுள்ள உறுதி மொழிகள் வெறும் பம்மாத்து, நேரத்துக்கு நேரம் ஒவ்வொன்றைத் தெரிவித்துவரும் ஜனாதிபதியை நம்புவதற்கு நாங்கள் தயார் இல்லை. ஜே.வி.பியை பிரதான கூட்டாளியாக வைத்துக்கொண்டுள்ள இந்த அரசு உருப்படியாக எதையாவது செயற்படுத்துமா என்பது சந்தேகமே'* என்று அவர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

ஈழத்தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டிய விடுதலைப் புலிகளும் இதேபோன்ற கருத்தையே ஆணித்தரமாக முன்வைத்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகையின் முதலாம் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக இக்கருத்து வெளிவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் மே மாத இதழ் அது. எனினும், கடந்த வாரம் ஜூன் 2ஆம் வாரத்தில்தான் - அப்பத்திரிகை வெளிவந்திருக்கின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை ஜனாதிபதி சந்திப்பதற்கும், கடந்த சனிக்கிழமை நாட்டு மக்களுக்கு அவர் உரை நிகழ்த்துவதற்கும் முன்னர் புலிகளின் இந்தக் கருத்து வெளிவந்திருந்தாலும், மேற்படி இரு நிகழ்வுகளின்போதும ஜனாதிபதி வெளியிட்ட புதிய நிலைப்பாடுகள், புலிகளின் முன்னைய கருத்தோட்டத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஏதேனும் புதிய அம்சங்களைக் கொண்டவையல்ல என்பது தெளிவு.

*"ஜனாதிபதியின் நிலைப்பாட்டை கடந்த கால அனுபவங்கள் - நிகழ்கால அரசியல் யதார்த்தங்கள் என்பவற்றின் அடிப்படையில் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் அது ஒரு சூழ்ச்சிகரமான அரசியலைக் கொண்டுள்ளது என்பது புலனாகும்.*

*"அம்மையாரின் அரசாங்கம் ஒரு சிறுபான்மை அரசாங்கமாக பலவீனமான நிலையில் உள்ளது.*

*"எந்த நேரத்திலும் அரசாங்கம் கவிழலாம் என்ற யதார்த்த நிலையே சிங்களத்தில் உள்ளது. இந்த நிலையற்ற அரசியற் சூழலில் தமிழர் தாயகம் - தமிழர் தேசியம் - தமிழர் தன்னாட்சி என்ற இறுதித் தீர்விற்கான தமிழரின் அரசியல் அபிலாஷைகள் பற்றி விவாதிக்கக் கூடிய நிலை சிங்களத்து அரசியலில் இல்லை.*

*"எனவே, இரண்டு வகையான அரசியல் பிரச்சினைகளையும் ஒன்றாக விவாதிப்பது சமாதான முயற்சிக்கு ஆபத்தாகவே முடியும். ஆனால், இந்த ஆபத்தைப்பற்றி அம்மையார் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில், அவரின் திட்டமே வேறு வகையானது. இடைக்கால நிர்வாகத்துடன் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சை இணைப்பது என்பது பேச்சை ஒரு கட்டம் வரை இழுத்தடித்து, அதன்பின் அதைக் குழப்பியடிப்பதையே நோக்காகக் கொண்டது. அம்மையாரின் திட்டத்தின்படி இடைக்காலத் தீர்வும் இல்லை நிரந்தரத் தீர்வும் இல்லை என்பதே உண்மையாகும். இந்த உண்மையை மனதில் கொண்டே அம்மையாரின் ஆலோசனையை புலிகள் நிராகரித்தனர்.*

"அம்மையாரின் திட்டத்தின்படி பேச்சு, குறித்த காலம்வரை இழுபடும்போது டோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட பெருந்தொகை நிதி சிங்கள அரசுக்கு வழங்கப்பட்டுவிடும். பின்னர் அந்த நிதி வளத்தைப் பயன்படுத்தியே தமிழர் மீது மீண்டும் ஒரு போரைப் புத்தூக்கத்துடனும் புதிய பலத்துடனும் தொடுப்பதே அவரின திட்டம்.

"புலிகளையும் ஏமாற்றி உதவிவழங்கும் நாடுகளையும் ஏமாற்றி காரியம் சாதிக்க முனையும் காலாவதியாகிப் போன அரசியல் தந்திரத்தையே அம்மையார் இப்போதும் பயன்படுத்த முனைகிறார். இந்தச் சூழ்ச்சியை சர்வதேச சமூகம் குறிப்பாக உதவிவழங்கும் நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும்".

இவ்வாறு தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர் புலிகள். அதுமட்டுமல்ல,

சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியை நேர்மையைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டிய தலையாய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு இருப்பதையும் புலிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இதனால் போரா? சமாதானமா? என்ற கேள்விக்கான விடை இன்றைய நிலையைப் பொறுத்தவரையில் உதவி வழங்கும் நாடுகளின் செயற்பாட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது என்பதையும் புலிகள் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

- இத்தகைய அரசியல் பின்னணியில்

போரா? சமாதானமா? சர்வதேச சமூகமே பதில்சொல் இதுவே ஈழத் தமிழர்கள் சர்வதேச சமூத்திடம் கேட்கும் இன்றைய கேள்வியாகும்.

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள

# அங்கவீனரின் வாழ்க்கையை மேம்படுத்த யு.என்.எச்.சி.ஆர்., யுனிசெவ் உதவி

வலி.கிழக்கு,ஜூன்15

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அங்கவீனமுற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் அவர்களுக்கு உதவிகளை வழங்கவும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், யுனிசெவ் ஆகிய பொதுநிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவில் வலது குறைந்து தாமே சுய தொழில் முயற்சியில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முயற்சிப்போருக்கு பண உதவிகளை அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம வழங்கவுள்ளது.

இதேவேளை, 18 வயதிற்குட்பட்ட வலதுகுறைந்தவர்களுக்கு அவர்களுக்கான மருந்து, கல்வி, விளையாட்டு ஆகியவற்றுக்கு உதவ 'யுனிசெவ்' அமைப்பு. முன்வந்துள்ளது.

இதற்கான உதவு தொகையாக 10 ஆயிரம் ரூபாவில் இருந்து 15ஆயிரம் ரூபாவரை வழங்கப்படவுள்ளது.

இதன் விவரங்களை உடன் தருமாறு பிரதேச செயலர் கிராம சேவையாளரிடம் கேட்டுள்ளார். (8-180)

# நெடுந்தீவு படகுச் சேவையை சீர்செய்யுமாறு கோரிக்கை

## ஜனாதிபதிக்கு பங்குத்தந்தை கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

நெடுந்தீவுக்கான படகுச் சேவையினை சீர்செய்து தருமாறு நெடுந்தீவுப் பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரத்தினம் அடிகளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அரசுக்குச் சொந்தமான ஒரே படகான குமுதினிப்படகு கடந்த 9 மாதங்களாக திருத்த வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இரண்டு படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

தற்போது அந்த இரு படகுச் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் நெடுந்தீவிற்கான போக்குவரத்தில் மக்கள் பெரும் கஸ்ரங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இந்த விடயத்தில் உடன் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களிடம் கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4-13)

# புங்குடுதீவுப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு

## தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

புங்குடுதீவுப் பகுதியில் நிலவும் சுகாதாரச் சீர்கேடு காரணமாக அப்பகுதியில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக தீவுப்பகுதி தெற்கு புனர்வாழ்வுக் கழகம் எச்சரித்திருக்கின்றது.

களவாக வெட்டப்படும் மாடுகளினதும், உரிமம் பெற்று வெட்டப்படும் மாடுகளினதும் எச்சங்கள் புதைக்கப்படாத நிலையில் வீசப்படுவதால் இதனை கட்டாக்காலி நாய்களும் மற்றும் காகங்களும் தூக்கிச்சென்று அந்தச் சுற்றாடலில் சுகாதாரத்தைச் சீரழிக்கின்றன.

களவாக வெட்டப்படும் மாடுகளின் அடையாளங் களை மறைக்கும் நோக்கில் அவற்றின் எச்சங்கள் உரப்பை களில் கட்டி ஆள்கள் இல்லாத வீட்டுக்கிணறுகளில் போடப்படுவதால் அவை கிணற்றில் கிடந்து அழுகி நோய்க்கிருமிகள் உருவாகுவதுடன் சுற்றாடல் எந்நேரமும் துர்நாற்றம் வீசிய நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4-15)

### பிக்குமார் தாக்கப்பட்ட சம்பவம்:

# இரு அமைச்சர்கள் உட்பட 5 பேர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்15

நாடாளுமன்றில் கடந்தவாரம் இடம்பெற்ற அமளிதுமளியின் போது இரு பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமை தொடர்பாக இரு அமைச்சர்கள், இரு பிரதியமைச்சர்கள் மற்றும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் மீது குற்றச்சாட்டுகள் முன்வைகக்கப்பட்டிருப்பதாகப் பொலீஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் நாடாளுமன்ற அமர்வின்போது ஏற்பட்ட குழப்பகரமான நிலைமையின்போது இரு ஹெல உறுமய பிக்குகள் தாக்கப்பட்டதுடன் அவர்கள் பின்னர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் குற்றம்புரிந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக விரைவான விசாரணைகளை நடத்தும்படி பொலீஸாருக்கு சபாநாயகர் உத்தரவிட்டிருந்தார்.

போலீஸார் இதுகுறித்து சொலிசிட்டர் ஜெனரலோடும், பிரதி சொலிசிட்டர் ஜெனரலோடும் ஆலோசனைகள் நடத்தியதன் பின்னர் விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

ஏற்கனவே, சபாநாயகரின் வாக்குமூலத்தைப் பொலீஸார் பதிவுசெய்திருப்பதுடன் படைக்கல சேவிதரின் வாக்குமூலத்தையும் பதிந்திருப்பதாகவும் தெரிகின்றது.

சபை நடவடிக்கைகள் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒரு வீடியோ கஸட்டை கைப்பற்றியிருப்பதுடன், தாக்குதலுக்குள்ளான பிக்குகளின் வாக்கு மூலங்களையும் பொலீஸார் பதிவு செய்துள்ளனர்.

இந்த இரு பிக்குமாரும் தாக்கப்படவில்லை என அரச தரப்பில் சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், தாக்குதலுக்குள்ளானவர்களான பிக்குமார் இன்னமும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ப)

**நாளை**

ஆனி 2
புதன்கிழமை
(16.06.2004)
திதி: சதுர்த்தசி
பின்இரவு 12.11 வரை.
நட்சத்திரம்:ரோகிணி
முழுவதும்
சுபநேரம்: 04.23 - 05.53
ராகுகாலம்: 11.53 - 01.23
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கடந்த காலத்தின் கறைபடிநத கசப்பை மறந்துவிட்டு நிகழ்காலத்தில் நிஜமாய் வாழப் பழகிக்கொள்.

# கல்வி நிறுவனங்களுக்கு....!

யாழ்ப்பாணம்,ஜூன்15

நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட சகல தனியார் கல்வி நிறுவனங்கள், கணனிக்கற்கை நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தும் ஆசிரியர்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகப் பதிவினை மேற்கொள்பவர்கள் பதிவுக் கட்டணத்துடன் மாதாந்தச் சந்தாவையும் செலுத்த வேண்டும் எனவும் ஏற்கனவே பதிவினை மேற்கொண்டவர்கள் தமது பதிவைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்குக் கன்னாதிட்டி சயன்ஸ் ஹோலில அமைந்துள்ள ஒன்றியத்தின் விசேட கருமபீடத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் -

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொளளாத நிறுவனங்கள் தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதிகள் மறுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

# யாழ். ஆஸ்பத்திரியில் இப்படி ஒரு நிலைமை

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களில் 134 பேர் ஒரே நாளில் கடமைக்குச் சமுகமளிக்காததால் அன்றைய தினம் ஆஸ்பத்திரியின் அன்றாடப் பணிகள் குறிப்பிடத்தக்க அளவில் ஸ்தம்பிதமடைந்தன என்று கூறப்படுகிறது.

கடந்த 10ஆம் திகதி இந்த நிலைமை ஏற்பட்டது.

மேற்படி வைத்தியசாலையில் பணிகளைத் தடங்கல் இன்றி மேற்கொள்வதற்கு நாளாந்தம் சுமார் 300 சிற்றூழியர்கள் கடமையாற்றவேண்டும்.

அதற்கேற்ற வகையிலேயே ஊழியர்களின் கடமைப் பட்டியல் போடப்பட்டிருக்கிறது.

இத்தகைய நிலையில் -

கடந்த10 ஆம் திகதி கடமையாற்றவேண்டிய சிற்றூழியர்களில் 134 பேர் ஒரேயடியாகக் கடமைக்குச் சமுகமளிக்காமல் நின்றுவிட்டனர்.

இதனால், அன்றைய தினம் வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் மற்றும் ஏனைய பணிகளில குறிப்பிடத்தக்க அளவில் தடங்கல்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நிர்வாகத்துக்கு எந்தவித முன்னறிவித்தலும் வழங்காமல் திடீரென - தமது பாட்டில் இவர்கள் லீவு எடுத்துக்கொண்டு நின்றுவிட்டனர் என்று நிர்வாகத்தரப்பில் கூறப்பட்டது.

உயிர்காக்கும் அத்தியாவசிய சேவையினை வழங்கும் இடமாக வைத்தியசாலை விளங்குகின்றது. அங்கு இவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டமை குறித்து பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (4-15)

# நயினை அம்மன் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தின் சிறப்புத் திருவிழாக்களாக எதிர்வரும் 24ஆம் திகதி கைலைக்காட்சியும், 27ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் -

30ஆம் திகதி இரவு சப்பரத் திருவிழாவும் ஜூலை முதலாம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் 3ஆம் திகதி தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் திருட்டுக்கள் மற்றும் அசம்பாவிதங்கள் இடம்பெறுவதைத் தடுக்கும்பொருட்டு நாகபூஷணி அம் பாள் ஆலய இளம் தொண்டர்கள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதான சபையினர் திருவிழாக் காலங்களில் ஒன்றுகூடும் அடியார்களுக்குத் தினமும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். (10-152)

# பெரியவிளானில் வெல்ல உற்பத்தி

வலி.தென்மேற்கு,ஜூன்15

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரியவிளானிலுள்ள தனது உற்பத்தி நிலையத்தில் பனை வெல்ல உற்பத்தியை இம் மாதம் தொடக்கம் ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் ஆடிப்பிறப்பிற்கு நல்ல தரமான வெல்லத்தை இத் தொழில்நிலையத்தின் மூலம் விநியோகிக்க முடியும் என்று சங்கப் பொதுமுகாமையாளர், கி.குணரத்தினம் தெரிவித்தார்.

இந்த உற்பத்தி நிலையத்தில் பனம் வெல்லம் பதநீரிலிருந்து சுத்தமாகத் தயாரிக்கப்படுவதால் மக்கள் மத்தியில் அதற்கு நல்ல வரவேற்பு இருக்கும் என்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (4-135)

# உணவு உற்பத்தியில் தன்னிறைவு காண வீட்டுத்தோட்டச் செய்கை கைகொடுக்கும்

**கமமும் புலமும்**
தயாரிப்பு : ஜெயஸ்ரீ

கடந்த முதலாம், 8ஆம் திகதிகளில் இதேபகுதியில் வெளியான 'உணவு உற்பத்தியில் தன்னிறைவுகாண வீட்டுத்தோட்டச் செய்கை கைகொடுக்கும்' என்னும் பகுதியின் இறுதிப்பகுதி இன்று வெளியாகிறது.

வீட்டுத்தோட்டப் பயிர்களுக்கு முக்கியமாக மூன்று போஷணைப் பொருள்கள் அவசியம். அவையாவன: நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் இவற்றைவிடவும் வேறு போஷணைப் பொருள்களும் சிறிய அளவில் தேவைப்படும். தொடர் பயிர்ச் செய்கை, மண்ணரிப்புப் போன்றவற்றால் மண்ணில் உள்ள போஷணைப் பொருள்கள் இழக்கப்பட்டு மண்ணின் வளம் குறைவடைகிறது. எனவே, மண்ணின் வளத்தைப் பாதுகாக்கவும், பயிர்களை நன்கு வளரச் செய்யவும் சேதனப் பசளைகளும், இரசாயனப் பசளைகளும் இடப்படுவது அவசியமாகின்றது.

| (அட்டவணை - II) | | |
|---|---|---|
| பயிர்கள் | இடவேண்டிய காலம் | இடவேண்டிய அளவு - கிராமில் |
| கோவா, பீற்றூட் கொடிபோஞ்சி, கரட், தக்காளி | நாற்று, விதைகள் நடுவதற்கு முன்னர் | யூரியா 100 கிராம்<br>பொஸ்பேற் 250 கிராம்<br>பொட்டாஸ் 100 கிராம் |
| வெண்டி, முள்ளங்கி, போஞ்சி, கத்தரி | நாற்று, விதைகள் நடுவதற்கு முன்னர் | யூரியா 75 கிராம்<br>பொஸ்பேற் 150 கிராம்<br>பொட்டாஸ் 75 கிராம் |
| பூசணி பாகல், கெக்கரி பீர்க்கு, புடோல் | நாற்று, விதைகள் நடுவதற்கு முன்னர் | யூரியா 220 கிராம்<br>பொஸ்பேற் 380 கிராம்<br>பொட்டாஸ் 125 கிராம் |

### சேதனப் பசளைகளின் நன்மைகள்

இலைகள், குப்பைகள், தாவரப் பாகங்கள், கால்நடைகளின் மலம், சிறுநீர் என்பன இயற்கையான சேதனப் பசளைகளாகும்.

சேதனப் பசளைகளை இடுவதால் மண்ணில் போஷணைப் பொருள்கள் சேரும், மண்ணில் காற்றோட்டம், அதன் கட்டமைப்பு விருத்தியடையும், மண் உலர்வும் தடுக்கப்படும். சேதனப் பசளை மண்ணில் நின்று நிலைத்திருக்கும்.

இருப்பினும், நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்றன இவற்றில் குறைந்த அளவிலேயே காணப்படுவதால் அதிகளவு சேதனப் பசளையினைப் பயன்படுத்த நேரிடும். எனவே, இரசாயன பசளைகளையும், பயன்படுத்த வேண்டிவரும். சேதனப் பசளைகளையும், இரசாயனப் பசளையையும் கலந்து இடும்போது நீண்ட காலத்துக்கு அவை மண்ணில் நிலைத்து நின்று பயிர்களுக்குப் பயன்படும். ஆயினும், சேதனப் பசளையை மட்டும் அதிகளவில் இட்டுப்பெறப்படும் மரக்கறிகள், பழவகைகள் என்பன மிகுந்த சுவையுடையனவாகவும் கிராக்கியுடையனவாகவும் விளங்குவது உறுதி.

இலகுவாகப் பெறக்கூடிய சேதனப் பசளைகளாக இலை, குழைகள், கூட்டெரு, கால்நடைகளின் எரு என்பன விளங்குகின்றன.

### இலை, குழைகள்

இலகுவில் சிதைவடையக் கூடிய இலை, குழைகளைப் புதைத்து அவற்றைச் சிதைவடைய விடுவதன் மூலம் மண் வளம் பெறுகின்றது. கூடிய பயனையும் பெறமுடிகிறது.

கிளிறிசிடியா, இப்பில் இப்பில், பூவரசு போன்றவற்றை வீட்டுத்தோட்ட வேலிகளில் நடுவதன்மூலம் இலை, குழைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

### கூட்டெரு

வீட்டுத்தோட்டப் பாவனையில் கூட்டெரு சிறந்த பயனைப் பெற உதவுகின்றது. நகரப் புறங்களில் சாணத்தைப் பெறுவது கஷ்டம் இதற்குப் பதிலாகக் கூட்டெருவை இலகுவில் தயாரித்துப் பயன்படுத்தலாம். வீட்டுத்தோட்டங்களில் சேகரிக்கப்படும் உலர்ந்த இலைகள், சமையலறையில் இருந்து அகற்றப்படும் மரக்கறிகள், கழிவுகள், பழங்களின் எச்சங்கள், மிருகக் கழிவுகள் போன்றன கூட்டெரு தயாரிக்கப் பயன்படும் பொலித்தீன், தேங்காய் சிரட்டை, பிளாஸ்ரிக், மரக்கட்டைகள், உலோகவகைகள் போன்றவற்றை இவற்றுடன் சேரவிடாது அகற்றிவிடவேண்டும். கூட்டெருப் பொருள்கள் சிறியவையாக இருப்பினும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை, அவற்றின் செயற்றிறன் அதிகரித்துக்காணப்படும். இதனால் அவை விரைவில் சிதைவடைந்து விடுகின்றன. மரச்சாம்பலை இவற்றுடன் சேர்த்துக்கொள்வதும் சிறப்புடையது.

### கூட்டெரு தயாரித்தல்

கூட்டெரு தயாரிக்குமுன் ஆரம்பக் கலவையைத் தயாரிக்க வேண்டும். கூட்டெரு தயாரிக்க இடப்படும் மூலப்பொருள்களின் மேல் இக்கலவையை விசிறுவதனால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையும் வளர்ச்சியும் அதிகரிக்கும். ஆரம்பக் கலவை என்பது நன்கு உக்கிய கூட்டெரு, மரச்சாம்பல், சாணகம் என்பவற்றை 3:1:1 எனக் கலந்து மாட்டின் சிறுநீர் கலந்த மண் சிறிது சேர்த்துக்கொண்ட கலவையாகும். இதனைத் தயாரிப்பதில் கஷ்டம் இருப்பின் கூட்டெருவுடன் சிறுநீர்கொண்ட மண்ணைக் கலந்தும் பயன்படுத்தலாம்.

கூட்டெரு தயாரிக்க மூலப்பொருள்களின் அளவுக்கேற்ப வசதியான குழிகள் தோண்டப்படவேண்டும். குழிகளின் ஆழம் ஒன்றரை மீற்றர் வரை இருக்கலாம். மூலப்பொருள்களைப் புரட்டுவதற்கு வசதியாகக் குழியின் ஒருபகுதியை நிரப்பாது மீதமாக விட்டுவைக்க வேண்டும். குழியின் அடியில் ஆரம்பக் கலவை அல்லது கூட்டெருவை சிறுபடையாக இடவேண்டும். படைபடையாக அவற்றை இட்டு நிரப்பும்போது ஒவ்வொரு படையின் மேலும் சிறிதளவு சாணக் கரைசலை விசிறினால் மிகவும் நல்லது. இலை, குழைகள் கிடைக்குமாயின் படைகளிடையே அவற்றை இடுவதன் மூலம் [illegible]பொருள்களை விரைவாக உக்ச[illegible]யலாம்.

**[illegible]ராளன்**

மூலப்பொருள்கள் சிதைவடைய நுண்ணுயிர்களுக்கு காற்று, நீர், வெப்பநிலை அவசியம். குழிகளின் படைகள் ஒவ்வொன்றிலும் ஈரப்பதன் இருப்பது அவசியம். மழைநீரில் இருந்து குழிகளைப் பாதுகாப்பது அவசியம். மழைநீரினால் சேதனப் பசளைகளின் போஷணைச் சத்துகள் கழுவிச்செல்லப்பட்டுவிடும்.

உலர்பிரதேசங்களுக்கு குழி முறை பொருத்தமுடையதாகும். குழிகளுக்குப் பதிலாகத் தரைகளிலும் கூட்டெரு தயாரிக்கலாம். கூட்டெருக் குவியலைப் பொலித்தீன் பைகளைக் கொண்டு மூடி வெப்பத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும். விரைவாக இவை உக்கலடைய உதவும்.

### கூட்டெரு தயாரிக்கப் புரட்டல்

மூலப்பொருள்கள் விரைவாக உக்கலடையக் கூட்டெருவைப் புரட்டிவிடுதல் அவசியம். குழிகளை நிரப்பி 2 வாரங்களின் பின் முதல்தடவையாகவும், முதலாவது தடவை புரட்டி 2 வாரங்களின் பின் இரண்டாவது தடவையாகவும் இரண்டாவது தடவை புரட்டி 4 வாரங்களின் பின் மூன்றாவது தடவையாகவும் புரட்டுதல் அவசியம். கூட்டெரு தயாரித்த 12 கிழமைகளுக்குள் அவற்றைத் தோட்டத்துக்கு இடவேண்டும்.

குழிகள் தயாரிக்கும்போது அல்லது கூட்டெரு தோட்டத்துக்கு இடும்போது சிறிதளவு மரச்சாம்பலைச் சேர்ப்பதன் மூலம் சேதனப் பசளைகளில் காணப்படும் அமிலத் தன்மையைப் போக்கமுடியும்.

| (அட்டவணை - I) | |
|---|---|
| பசளை வகை | போஷணைப் பதார்த்த அளவு |
| யூரியா | நைதரசன் 46% |
| அமோனியம் சல்பேற் | நைதரசன் 21% |
| பொஸ்பேற் | பொஸ்பரஸ் 46% |
| பொட்டாஸ் | பொட்டாசியம் 60% |

நகரப்புறங்களில் கூட்டெரு தயாரிக்க அடிப்பகுதி அகற்றப்பட்ட பீப்பாக்களைக் கூடப்பயன்படுத்தலாம். காற்றோட்ட வசதிக்காக பீப்பாய்களைச் சுற்றிவரத் துளைகள் இடப்படவேண்டும். கூட்டெருவாகும்போது அதன் உள்ளே வெப்பம் காணப்படும். இதனால், அங்கு காணப்படும் களைகள், விதைகள் என்பன அவிந்து, அழிந்து விடுகின்றன.

### விலங்கு எரு

சாணம், ஆட்டெரு, கோழி எரு என்பன வீட்டுத்தோட்டங்களுக்கு சிறந்த பசளைகளாகும். பாத்திகளில் அல்லது நடுகைக்குழிகளில் இவற்றை மண்ணுடன் கலந்துவிடவேண்டும். கோழி எரு இட்டு 3 நாள்களின் பின் விதைகளையோ நாற்றுக்களையோ நடவேண்டும். தினம்தோறும் நீர் ஊற்றவேண்டும். சிதைவடையாத கோழி எரு பயிர்களுக்குத் தீங்கு தரும். உமி, சாணம், ஆட்டெரு, கோழி எரு என்பன நன்றாக உக்கிய பின்பே பயன்படுத்தப்படவேண்டும்.

### சேதனப் 'பசளைகளையிடல்

நாற்று அல்லது விதைகளை நடும்குழிகளில் 2-3 கிலோ சேதனப் பசளைகளை இடவேண்டும். 1x3 மீற்றர் அளவுடைய பாத்தி ஒன்றுக்கு 6 கிலோவுக்குக் கூடிய சேதனப் பசளை இடுவது நல்லது. சேதனப் பசளைகள் கிடைக்கும்போதல்லாம் அவற்றைப் பயிர்களுக்கு இடலாம். மாட்டெலும்புத்தூள், மீன் எலும்புத் தூள் என்பவற்றை இடுவதன் மூலம் பயிர்களுக்குக் கல்சியம் கிடைக்கிறது.

### இரசாயனப் பசளைகள்

இரசாயனப் பசளைகள் மூலமும் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பவற்றைப் பயிர்களுக்கு வழங்கமுடியும். சில இரசாயனக் கலவைகளில் அடங்கியுள்ள போசணைச் சத்து . அளவுகள் விவரம் (அட்டவணை I இல்)

இரசாயனப் பசளைகளில் பெரும்பாலும் மூன்று போஷணைச் சத்துக்களே அடங்கியுள்ளன. ஆனால், சேதனப் பசளைகளில் எல்லாவகைச் சத்துக்களும் அடங்கியுள்ளன. எனவே, இரசாயன சேதனப் பசளைகள் இரண்டையும் கலந்து இடுவதன் மூலம் சிறந்த பயனைப்பெறலாம்.

பயிர்களுக்குப் பின்வரும் இரண்டு சந்தர்ப்பங்களில் பசளை இடவேண்டும். 1) அடிக்கட்டுப் பசளை. நாற்று, விதை நடுவதற்கு முன் மண்ணுடன் கலந்துவிடல் வேண்டும். 2) மேற்கட்டுப் பசளை. பயிர்வளரும்போது மண்ணின் மேற்பரப்பில் இட்டு மண்ணுடன் கலந்துவிடவேண்டும். நீர்ஊற்றவும் வேண்டும். இதனால், காய்களும் அதிகம் உற்பத்தியாகும்.

| (அட்டவணை - III) | | | |
|---|---|---|---|
| பயிர்கள் | முதலாம்முறை இடல் | 2ஆம் முறை இடல் | 3ஆம் முறை இடல் |
| | நட்டு கிழமைகளில் | | |
| பாகல், புடோல் பீர்க்கு, பூசணி, கெக்கரி, முள்ளங்கி | 2 | 5 | - |
| கோவா | 3 | 6 | - |
| கரட் | 3 | 6 | 9 |
| வெண்டி | 4 | 8 | - |
| பீற்றூட் | 2 | 4 | - |
| போஞ்சி | 3 | - | - |
| கறிமிளகாய் | 4 | - | - |

10ச.மீ.பரப்பளவுள்ள இடத்துக்கு இடவேண்டிய அடிக்கட்டுப் பசளைகளும் அளவுகளும் (அட்டவணை II இல்).

*10 ச.மீ. பரப்பளவிற்கு யூரியா 100 கிராமும் பொட்டாஸ் 75 கிராமும் இடப்படவேண்டும். (அட்டவணை III இல்). மேற்கட்டுப் பசளைகளைப் பயிரில் இருந்து ஓரளவு தூரத்தில் அதனைச் சுற்றி இட்டு மண்ணுடன் கலந்துவிடல்வேண்டும். பசளை இட்ட பின் நீர்ப்பாசனம் செய்வது அவசியம். பசளை இட முன் களைகளை பிடுங்கி அகற்றி விடவேண்டும். ★

---

**உடதலவின்ன படுகொலை வழக்கு**

# அனுருத்தவின் பிரதம பாதுகாவலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்

கொழும்பு,ஜுன்15

உடதலவின்ன படுகொலை வழக்கு 'ட்ரயல் அட்பார்' விசாரணையின்போது அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு பிரதம இன்ஸ்பெக்டர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்த வழக்கின் முதல் எதிரியும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்தையின் பிரதம மெய்ப்பாதுகாவலராகவும் இவரே இருந்து வருகின்றார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் வழக்கு விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீதிமன்றுக்கு வெளியில் ஒரு சாட்சியுடன் உரையாடிக்கொண்டிருந்துள்ளார்.

இதனை அரச தரப்புச் சட்டத்தரணி மோகான் செனவிரட்ண அவதானித்துள்ளார் என்பதைப் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். இந்த இன்ஸ்பெக்டர் சாட்சிகள் மீது தனது செல்வாக்கைப் பிரயோகிக்க முயன்றிருக்கவேண்டும் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார். இவ்வழக்கு மேல் விசாரணைக்காக கடந்த 8ஆம் திகதி எடுத்துக்கொள் ளப்பட்டபோது இது இடம்பெற்றது.

ரயல் அட்பார் விசாரணை மேல் நீதிமன்ற நீதியரசர்கள் எரிக் பஸநாயக்க (தலைவர்) தீப்பாலி விஜயசுந்தர மற்றும் சுனில் ராஜபக்ஷ ஆகியவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோவின் குறுக்கு விசாரணையில் சப் இன்ஸ்பெக்டர் ஆனந்த உதயஹேவித் கூறியதாவது:-

2001 டிசெம்பர் 5ஆம் திகதி கடமையின் நிமித்தம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, தெல்தெனிய பொலீஸ் பகுதிக்குள் இலக்கத்தகடு இல்லாத இரண்டு ஜப் வண்டிகள் பிரவேசித்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. அந்நேரம் தெல்தெனியாவிலிருந்து நான்கு கிலோமற்றர் தூரத்தில் உடிஸ்மத்துவ என்ற இடத்தில் நான் இருந்தேன். பாதசாரிகளிடம் விசாரித்த போது அந்த வண்டிகள் ஹில்குருப் தோட்டப்பகுதி வீதியால் சென்றுகொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

இந்தக் கட்டத்தில் பிரதி சொலிஸிடடர் ஜெனரல் குறுக்கிட்டு, நீதிமன்றிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி மோகான் செனவிரட்ண எனக்கு வழங்கியுள்ள தகவலின்படி முதல் எதிரியின் பிரதம மெய்க்காவலரும் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு பிரதம இன்ஸ்பெக்டருமானவர் நீதிமன்றுக்கு வெளியில் சாட்சியுடன் உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறார். சாட்சிமீது அவர் தமது செல்வாக்கைப் பிரயோகித்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், சாட்சி அளிக்கும் சாட்சியத்தைப் பார்க்கும் போது அந்தப் பிரதம இன்ஸ்பெக்டர் இவர் மீது தனது செல்வாக்கைப் பிரயோகித்திருப்பார் என்ற சந்தேகம் எழுகின்றது என்று தெரிவித்தார்.

முதல் எதிரியின் பிரதம மெய்க்காவலரையும் அமைச்சரவைப் பாதுகாப்புச் சேவைப்பிரிவின் ஓர் அதிகாரியையும் நீதிமன்றம் அழைத்தபோது 15 நிமிடங்களுக்கு முன்னர் அவர் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவுக்குத் திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டத்தில் முதல் எதிரியின் பிரதம மெய்ப்பாதுகாவலரை அன்றைய தினமே நீதிமன்றில் ஆஜர் செய்யும்படி அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளருக்கு உத்தரவிட்டு நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்று மீண்டும் கூடியபோது குறித்த பிரதம இன்ஸ்பெக்டர் ஆஜர் படுத்தப்பட்டார். நீதிமன்றம் மேற்படி சம்பவம் பற்றி விசாரணை நடத்தும்படி குற்றப்பிரிவு புலாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டதுடன் மேற்படி பிரதம இன்ஸ்பெக்டரை விளக்கமறியலில் வைக்கும்படியும் உத்தரவிட்டது. (ப)

---

## உள்ளூராட்சி வாரத்தில் பொதுவேலைகள்

வலி.கிழக்கு,ஜுன்15

எதிர்வரும் ஜுலை மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள உள்ளூராட்சி வாரத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினர் பொதுவேலைகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்த வாரத்தில் நன்னீர் கிணறுகளுக்கு குளோறின் இடுதல், கட்டாக்காலி நாய்களை அழித்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (-8-180)

## பொதுச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்15

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் ச.முருகனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (10-ரி)

# குருநகர் மீனவர் படுகொலை மாபெரும் துன்பியல் சம்பவம்

## நினைவு நாள் நிகழ்வில் வண.பிதா

குருநகர்,ஜூன்15

மண்டைதீவு கடற்பரப்பில் குருநகர் மீனவர்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் சிறிலங்காவின் கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு மிகப்பெரிய துன்பியல் சம்பவமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் வண. பிதா யோசப் ஜெயசீலன் அடிகளார்.

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி மண்டைதீவு கடற்பரப்பில் 'தூயஒளி' படகின் மூலம் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படைப்படகில வந்த கறுப்புச் சட்டைக்காரர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட 31 குருநகர் மீனவர்களின் 18 ஆவது வருட நினைவுதினம் கடந்த வியாழக்கிழமை குருநகரில் அனுஷ்டிக்கப்பட்டது.

இம் மீனவர்களின் நினைவாக குருநகர் சனசமூக நிலைய முன்றிலில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினால் நினைவுத்தூபி ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நினைவுத் தூபியை திரைநீக்கம் செய்துவைத்து உரையாற்றிய பேரதே வண.பிதா யோசப் ஜெயசீலன அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்கள் இன்றும் விரக்திநிலையிலேயே வாழ்ந்து வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவர்கள் விரக்திநிலையில் வாழ்வதற்கான காரணத்தை நாம் உலகிற்கு தெரியப்படுத்தினோமா? அன்று நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் பற்றிய விவரங்களை ஆவணப்படுத்த வேணடியது எமது கடமையாகும்.

அச்சம்பவத்துடன் தொடர்பான நிகழவுகளை நாம் கதையாக, நாடகமாக மக்கள் முன்னால் வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் அச்சம்பவங்களை எதிர்காலச் சந்ததியினர் அறியக்கூடியதாக இருக்கும்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள இந்நினைவுத் தூபியில் அன்று படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அன்று படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர்களை இந்த நினைவுத் தூபியில் பொறிப்பதற்கு இந்த தூபியை நிறுவியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார்.

சிறப்புரை நிகழ்த்திய வண. பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகளார் உரையாற்றுகையில் கூறியதாவது:

அரசபடைகள் தமிழ்ப் பகுதியில் மேற்கொண்ட படுகொலைச் சம்பங்களுக்கு இதுவரை மக்களிடம் மன்னிப்புக் கோரவில்லை. மண்டைதீவுக் கடற்பரப்பில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம், குமுதினிப் படகில் பொதுமக்கள் வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல் ஆகியவை அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரப் படுகொலைச் சம்பவங்களாகும். இத்தவறுக்கு மன்னிப் புக்கோரவேண்டியது அவசியமாகும்

கடந்த வருடத்தில் குருநகர் புனித யாகப்பா ஆலயத்திற்கு வருகை தந்த அமைச்சர் ஒருவர் நடைபெற்ற சம்பவத்துக்காக 2 லட்சம் ரூபா நிதியை வழங்கினார். ஆனால், தாக்குதல் சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரவில்லை என்றார் - ஜெயசேகரம் அடிகளார்.

இந்த மீனவர்களின் நினைவுத் தினத்தன்று காலை 6.15 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நினைவுத்திருப்பலி ஒப்புக்கொடுக கப்பட்டது. குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண. பிதா எஸ்எச்.சகாயநாயகம் அடிகளார், வண. பிதா யோசப் ஜெயசீலன் அடிகளார் மற்றும் வண. பிதா எம்யேசுரட்ணம் அடிகளார் ஆகியோர் இந் நினைவுத் திருப பலியைக் கூட்டாக நிறைவேற்றினர்.

இந்நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு இறந்தவர்களுக்கு இறை அருள் கிடைக்க வேண்டினர். (4-5-51)

# மோசமான நிலையில் வத்திராயன் முன்பள்ளி

செம்பியன்பற்று,ஜூன்15

வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கிராமத்தில் இயங்கும் முன்பள்ளி மிகவும் மோசமான நிலையில் இயங்கி வருகிறது.

ஒரு சிறு கொட்டகையில் மணல நிரப்பப்பட்ட நிலத்தில் இருந்தே சிறுவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இக் கொட்டகையில் மழை காலத்தில் மழை நீர் உட்புக வாய்ப்புண்டு. அத்துடன், கடற்கரைக் காற்றினால் மண் அள்ளி வீசப்படுவதாலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முன்பள்ளிக்கு தளபாட வசதிகள் கூட போதிய அளவில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, தொண்டு நிறுவனங்கள் மேற்படி முன்பள்ளியைப் புனரமைத்து உரிய வசதிகளுடன் அதனை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் எதிர் பார்க்கின்றனர்.(4-36)

# மருதங்கேணிக் கோட்டத்தில் மாணவர்களுக்குக் காலை உணவு

பருத்தித்துறை,ஜூன்15

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பதினேழு பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்படவுள்ளது.

முதலில் தரம் 1 தொடக்கம் - தரம் 9 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுளளது. இதற கான முழு உதவிகளையும் உலக உணவுத் திட்டம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான இரண்டு பயிற்சிப் பட்டறைகள் இம்மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. 21ஆம் திகதி குடத்தனை அதக பாடசாலையிலும் 22ஆம் திகதி மருதங்கேணி இந்து தமிழ் வித்தியாலயத்திலும் பயிற்சிப் பட்டறைகள் நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (4-118)

# ஒப்பந்தகாரர்கள் அசமந்தம்; கட்டடப்பணிகள் ஸ்தம்பிதம்

செம்பியன்பற்று,ஜூன்15

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மூன்று பாடசாலைகளில் கட்டடவேலைகள் ஒப்பந்தகாரரின் அசமந்தப் பேரக்கால் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்று பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கை காரணமாக அழிக்கப்பட்ட உடுத்துறை மகாவித்தியாலயம், வெறநிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், தாளையடி றோ.க. பாடசாலை ஆகியவற்றில் 'நிக்கொட்' உதவியுடன் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இங்கு கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் இன்னும் முடிவடையவில்லை.

வேலைகளை விரைவாக முடிப்பதற்கு ஒப்பந்தகாரர்கள் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இதனால் பாடசாலைகளில் இட நெருக்கடி காரணமாக பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மாணவர்களின் நிலைமைக கருத்திற்கொண்டு இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து கட்டடங்களை விரைவில் பூர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அதிபர்கள் கேட்டுள்ளனர். (4-36)

### மருதங்கேணிக்கு மின்சாரம் இல்லை

செம்பியன்பற்று,ஜூன்15

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்கு மின்சாரம் வழங்குமாறு அப்பகுதி பொது ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம் வழங்குவதற்கான பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் யுத்தம் காரணமாக எல்லாத் திட்டங்களும் கைவிடப்பட்டன.

தற்போது போர் நிறுத்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் மக்கள் மீளக் குடியமர்ந்த பின்பும் மின்சாரம் வழங்குவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் இங்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் எவ்வித வேலைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை எனவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (4-36)

### ஈச்சமோட்டை ச.ச.நிலைய மைதானம் விஸ்தரிப்பு

அரியாலை,ஜூன்15

யாழ் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இருந்த காணி, நிலைய நிர்வாகதளால் கொள்வனவு செய்யப்பட்டு மைதானத்தை விஸ்தரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நிலையத் தலைவர் தி.சுரேந்திரன் தெரிவித்தார்.

மைதானத்தை விஸ்தரிக்கும் சிரமதானப் பணியில் நிலைய உறுப்பினர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகின்றனர். (ஐ-17)

# சீருடை வழங்கப்படுகிறது

வலிகாமம் தெற்கு,ஜூன்15

வலி. தெற்குப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான சீருடை விநியோகம் அந்தந்தக் கிராம அலுவலர் மூலமாக நடைபெற்று வருகிறது.

எனவே, உரியவர்கள் தங்கள் பிரிவு கிராம சேவை உத்தியோகத்தரிடம் சென்று சீருடைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வலி. தெற்கில் வசித்தவர்கள் தாம் முன்னா வசித்த பகுதிக் கிராம அலுவலரிடம் தொடர்புகொண்டு சீருடையைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது. (4-152)





அண்மையில் முகமாலையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து பயணிகளுக்கு படையினர் சிற்றுண்டிகளையும் பானங்களையும் வழங்கினர். கடந்த மாதம் 31ஆம் திகதியும் ஜூன்முதலாம் திகதியும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்குச் சென்று திரும்பிய பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் போக்குவரத்து நெருக்கடி காரணமாக முகமாலையில் தரித்து நின்ற சமயம் படையினர் அவர்களுக்குப் போக்குவரத்து உதவிபுரிந்தனர் - என்று பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு குளிர்பானங்கள் வழங்குவதையும் கூடியிருந்த பயணிகளையும் படத்தில் காணலாம். *(படம்: பலாலி தலைமையகம்)*




# எரிபொருள் விநியோகிக்கும் பவுஸர்களுக்குப் பற்றாக்குறை

அரியாலை,ஜூன்15

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் எரிபொருள் விநியோகிக்கும் களஞ்சியத்தில் போதிய பவுஸர் வாகனங்கள் இல்லை. இதனால், எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள்களை விநியோகிக்கும் பணிகள் தாமதம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள்களை ஏற்றி எரிபொருள விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கும் சேவையில் ஈடுபட்டு வரும பவுஸர் வாகனங்கள் திடீர்திடீரெனப் பழுதடைந்து விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# மின்கம்பம், கம்பி இல்லை; புதிய இணைப்புகள் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜூன்15

மின்கம்பங்கள் மற்றும் கம்பிகள் என்பன போதிய அளவு இல்லாமையால் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு உடனடியாக மின்சார விநியோகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக மின்சாரசபையின் வடமாகாண பிரதி முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய மின் இணைப்புகளைப் பெறுவதற்காகப் பலர் விண்ணப்பித்து வருகின்றனர்.

விண்ணப்பிக்கும் அனைவருக்கும் மின் விநியோகத்தை மேற்கொள்ளக்கூடிய இயந்திரங்கள் உண்டு எனினும், மின்சார விநியோகத்திற்கான மின் கம்பங்கள், கம்பிகள் மற்றும் வேறுசில உபகரணங்கள் இன்மையால் அதனை உடனடியாக மேற்கொள்ளமுடியவில்லை.

மின் கம்பங்கள் முன்னைய காலங்களில் யாழ். குடாநாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் மின விநியோகம் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

ஆனால், தற்போது அவை கொழும்பிலிருந்து கொண்டுவரப்படுவதால் செலவு அதிகமாக இருப்பதுடன் கால தாமதமும் ஏற்படுகின்றது என்று தெரிவித்தார். (4-5)

# ஊர்காவற்றுறையில் 27 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரம்

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள நாரந்தனை வடக்கு, சுரியவத்தைக் கிராமத்தில் அரச காணிகளில் குடியமர்ந்துள்ள 27 குடும்பங்களுக்கு கடந்த 10 ஆம் திகதி காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கினார்.

முன்னர் இக்கிராமத்தில் காணிகள் அற்ற பொதுமக்கள் அரசகாணியில் குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தனர். தற்போது அவர்களுக்கே அக்காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இக்காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் காணி உத்தியோகத்தர் சி.சிவசுப்பிரமணியம், நாரந்தனை வடக்கு - கிராம சேவை அலுவலர் எஸ்.இராமேஸ்வரன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரதம லிகிதர் எஸ்ஜெயபாலன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (4-31)

# உலக வங்கியின் உதவியுடன் வீடுகள்

செ்யியன்பற்று,ஜுன்15

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இராணுவ நடவடிக்கை காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு உலகவங்கியின் 25 வீட்டுத திட்டத்தின் கீழ் வீடுகளை அமைத்துக கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக ஆழியவளை கிராமத்தில் பய னாளிகளைத் தெரிவுசெய்யும் பணி நடைபெறுவதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

மேற்படி திட்டத்தின்படி ஒரு வீட்டின் பெறுமதி ஒரு லட்சத்து 60ஆயிரம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (8-36)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 15.06.2004 - 20.06.2004 வரை

*முன்கூட்டியே பதிவு செய்யவும்*

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்

☆ ஆளுமைக்குறைவு ☆ நடுக்கம் ☆ நித்திரைக் குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு:* இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு:

பலரது பாராட்டைப் பெற்ற

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr.P.ஆறுமுகம் S.M.P.**

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205

T.P.: 3181, 5399

(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-35532) (24-21-11)


## 31 ஆம் நாள் அழைப்பு



அமரர் **கனகர் கந்தையா**

(தம்மளை, அளவெட்டி மேற்கு)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14.08.1926 | 17.05.2004 |

17.05.2004 அன்று இறைபதம் எய்திய எமது ஒளிவிளக்கு அமரர் **கனகர் கந்தையா** அவர்களின் துயரில் கலந்துகொண்டு, ஆறுதல் கூறியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் உதவிகள் பலபுரிந்த அனைவருக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம். மற்றும் அவரின் 31 ஆம் நாள் நினைவாக அன்னாரின் இல்லத்தில் நாளை (16.06.2004) புதன்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திக் கிரியைகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு.

(33057)(34)

## 5 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 11 - 1934 | 15 - 06 - 1999 |



அமரர்

**கோபாலசுந்தரம் திருத்தணிகாசலம்**

*(இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கொழும்பு)*

திதி: 19.06.2004

மனிதர்குல மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து பொன்னம்பலவாணரடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு மாறவே மாறாது
உங்கள் நினைவுடனேயே நாம் இப்பூவுலகில் வாழ்கிறோம்.

- அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை, பெறாமக்கள்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(33051)(34-21-11)

## கணித, விஞ்ஞான எழுத்துப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான வினாடி - வினாப் போட்டியின் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான பரீட்சை நிலையங்கள சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவதோதய மகா வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தந்தப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுடன் பாட ஆசிரியர்கள் இருவர் - சமுகமளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(4-117)

## வீதியில் குழி; பயணிகள் சிரமம்

சங்கானை,ஜுன்15

சங்கரத்தைச் சின்னம்மா வித்தியாலயத்தின முன்னுள்ள வீதியிலுள்ள மதகு உடைந்ததனால் அவ்விடத்தில பாரிய குழியொன்று காணப்படுகின்றது.

ஒருபுறம் பாடசாலையும் மறுபுறம் சங்கரத்தைக் குளமும் அமைந்துள்ள இவ்வீதியால் செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலத்த சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

இந்தக்குழி கடந்த ஒருவருடமாக இருக்கின்றபோதிலும் சம்பந்தப்பட்டவர்கள் இதனைத் திருத்துவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று பொதுமக்களும் பாடசாலைச் சமூகத்தினரும் கவலை தெரிவிக்கின்றனர்.

## வருடாந்தப் பெருந் திருவிழா

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

பெருந்திருவிழாக் கிரியைகள் கோப்பாய் 'வேதாகமக்கிரியாபானு' சிவஸ்ரீ.சோ.இ.பிரணதார்த்திகரக்குருக்களால் நடத்தப்படும். (அ)

## லொறியில் மாடுகளை அடைத்துக்கொண்டு வந்தோர் கைது!

சிறிய லொறி ஒன்றுக்குள் ஆறு மாடுகளை அடைத்துக்கொண்டு வந்தவர்களை கொடிகாமம் பொலீஸார் வழிமறித்தனர்.

இவ்வாறு அடைத்துக்கொண்டு வந்ததன் மூலம் மாடுகளை சித்திரவதைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டின்பேரில் லொறியில் வந்த மூவரையும் பொலீஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

மூன்று நபர்களையும் நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு தர்மப் பணமாக தலா ஆயிரம் ரூபா செலுத்தி பற்றுச்சீட்டினை நீதிமன்றில் சமர்பிக்குமாறும் தலா 2 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறும் சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

மன்னாரிலிருந்து தவிடுமூடைகளுடன் இந்த ஆறு மாடுகளும் பண்டத்தரிப்புக்கு மூடிய நிலையில் கொண்டுவரப்பட்டபோதே பொலீஸார் தடுத்து நிறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

புத்தூர், ஆவரங்காலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தெய்வேந்திரராசா, பண்டத்தரிப்பைச் சேர்ந்த மார்க்கண்டு தங்கராசா, புன்னாலைக்கட்டுவன் தெறகைச் சேர்ந்த சரவணமுத்து அருந்தவராசா ஆகியோரே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர். (8-117)

## நிவாரணம் வழங்கப்படுகிறது

தென்மராட்சிப் பிரதேசத்தின் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின கிளைகளில் கடந்த பெப்ரவரி மாதத திற்குரிய உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர் ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்து குடியேறியவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர், அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினால் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாதோர் ஆகியோருக்கு தற்போது உலர உணவுப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் -

ஏனையோருக்கு அடுத்த வாரம் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுமெனவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (4-117)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**15.06.2004**

கண்ணதாசன்-கேமலதா தம்பதிகளின்

செல்வப்புதல்வன்

**செல்வன் சரணியன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (15.06.2004) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, ராஜன் மாமா, அத்தை, மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



(32923)

இல.31,
ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மு.கேசவராஜன்
(மாமா)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.ஆ.சிவசுவாமி**

(மேலதிக அரச அதிபர், யாழ்ப்பாணம்)

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக பருத்தித்துறை பிரதேச செயலராக இருந்து அளப்பரிய சேவையை ஆற்றி, யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ள திரு.ஆ.சிவசுவாமி அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
புலோலி ப.நோ.கூ.சங்கம்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி-35576)(37-21-11-)


**Mega புலமை பரிசில்**

Register Now!

முதன்முறையாக ஏசியன் கொம்பியூட்டர்ஸ் நடாத்திய கணனி புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளதால் கீழ்கண்ட எமது கிளைகளில் பதிவுகளை உடன் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**ASIAN COMPUTERS**

யாழ்ப்பாணம் — சுன்னாகம் — நெல்லியடி

**Dialog GSM** டயலொக்

கையடக்க GSM தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

kit

**Sri Murugan**

Tele Communication
&Agency Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392
Fax: 222 3214.

எந்நேரமும் உன்னுடன்...

(சி-35548)(21-11)

# உடையார்கட்டில் உயிரிழந்த பொதுமக்களுக்கு அஞ்சலி நிகழ்வு

புதுக்குடியிருப்பு,ஜூன்15

உடையார்கட்டு சுதந்திரபுரம் கிராமத்தில் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட பொதுமக்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. சுதந்திரபுரம் கிராம அலுவலர் பொ.சுந்தரலிங்கம் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வில் தேசியக் கொடியை முல்லைமாவட்ட அரசியற்றுறையைச் சேர்ந்த சின்னவனும், பொதுச்சுடரை உதவி அரச அதிபர் செ.தயானந்தாவும் ஏற்றிவைத்தனர்.

உதவி அரச அதிபர் செ.தயானந்தா, அரசியற்றுறையைச் சேர்ந்த சின்னவன், உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் ராஜா, சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை அதிபர் கணேஸ்வரன், உடையார்கட்டு வடக்கு கிராம சேவையாளர், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

ஆசிரியர்கள், மாணவர்கள், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொதுமக்கள் உட்படப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ஐ-353)

# கண்டாவளைக் கிராமத்துக்கு பஸ் சேவை இடைநிறுத்தம்

## பயணிகள்பாடு பெரும் சிரமம்

பரந்தன்,ஜூன்15

கண்டாவளைக கிராமத்தில் இடம பெற்றுவந்த பஸ்சேவை சுமார் 8 மாத காலமாக நிறுத்தப்பட்டிருப்பதால் அப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்திலிருந்து கிளிநொச்சிக்கும் விசுவமடுவிற்கும் இடையிலான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இன்னல்களுக்குள்ளாகின்றனர். வீதிச் சீர்கேடு எனக் காரணம் காட்டப்பட்டே இச் சேவை நிறுத்தப்பட்டது. எனினும, மீண்டும் பஸ் சேவையைத் தொடங்குவதற்கு வசதியாக மக்கள் அவ் வீதியைச் சீர்செய்த போதிலும் பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் கண்டாவளைக் கிராமத்திலிருந்து பிரதான நெடுஞ்சாலைக்குச் செல்வதற்காகச் சுமார் 6-8 கிலோ மீற்றர் தூரத்தை நடந்தே கடக்க வேண்டியுள்ளது என இப்பகுதி மக்கள் பெரும கவலை தெரிவித்துள்ளனர்.(ஐ-352-ரி)

# முல்லை வலயப் பாடசாலைகளில் கட்டடங்களின்றி மாணவர் சிரமம்

## சமாதான காலத்திலும் தொடரும் அவலம்

ஒட்டுசுட்டான்,ஜூன்15

முல்லை வலயப் பாடசாலைகளில கட்டட வசதியின்றி மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிககப்படுகின்றது.

இன்றைய சமாதான சூழ்நிலையிலும முல்லை வலயப் பாடசாலைகளில் கட்டட வசதியின்மையால் மாணவர்கள திறந்த மண்டபங்களிலும் மரங்களின் கீழும் அமர்ந்து கல்வி கற்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

இதனால், மாணவர்கள் உரிய முறையில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது கஷ்ரப்படுகின்றனர்.

இங்கு பல பாடசாலைகளில் குடிதண்ணீர், மலசலகூட வசதிகள் கூட இல்லை.

எனவே, இதனைக் கருத்திற் கொண்டு இன்றைய சூழ்நிலையில் இம்மாணவர்களின் கல்விநிலை மேம்பாடடையும் வகையில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். குருகுலராசா கேட்டுள்ளார். (4-ரி-341)

## ஒட்டுசுட்டானில் பாதீனியம் அழிப்பு

ஒட்டுசுட்டான்,ஜூன்15

சூழல்பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டுக் கடந்த செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாதீனியம களைகள் சிரமதானம் மூலம் அழிக்கப்பட்டன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஒட்டுசுட்டான் இணைப்பாளர் வே.தயா தலைமையில் அன்று காலை 9 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மேற்படி பாதீனியம் களைகள் சிரமதானப் பணி மூலம் அழிக்கப்பட்டன.

இப்பணிக்கு விவசாயப் போதனாசிரியர், உதவி விவசாயப் பணிப்பாளர் மற்றும் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அமுதலிங்கம் ஆகியோர் அனுசரணை வழங்கினர்.

ஒட்டுசுட்டான் பிரதேச பாடசாலை அதிபர்கள, ஆசிரியர்கள், மாணவர்கள், பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கப் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர். (4-341)

# கற்சிலைமடு மருத்துவமனையில் 2,882 பேருக்குச் சிகிச்சை

கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் கடந்த மே மாதத்தில் பல்வேறு நோய்கள் காரணமாக 2 ஆயிரத்து 882 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைரஸ் காய்ச்சல், மலேரியா, புழுத்தொற்று ஆஸ்துமா போன்ற நோய்களாலும், பாம்புக்கடி, நாய்க்கடி மற்றும் காயங்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் இத்தொகையினுள் அடங்குவர் என மருத்துவமனை வைத்தியர் எழில்மங்கை தெரிவித்துள்ளார். (ஐ-3-341-ரி)

# மரங்களை மீள நடுவது தொடர்பான கருத்தரங்கு

பரந்தன்,ஜூன்15

கண்டாவளைப் பிரதேசத்தில் போரினால் அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாக மரங்களை மீள நடுவது தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த வியாழக்கிழமை புளியம்பொக்கணை கமநல சேவை நிலைய மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கண்டாவளைப பிரதேச இணைப்பாளர் நா.காசிநாதன் தலைமையில் நடைபெற்றது.

சூழல் பாதுகாப்பு மாதத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகள், மரம் நட வேண்டிய இடங்கள் தொடர்பாக அங்கு கலந்துரையாடப்பட்டது. தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறவனத்தினரால் கமக்கார அமைப்பினருக்கு இலவசமாகப் பழக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

கண்டாவளைப் பிரதேச கமக்கார அமைப்பினர் மற்றும் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (ஐ-352)

# முல்லையில் ஐந்து பிரதேசங்களில் பட்டதாரிகள் நேர்முகத் தேர்வு

புதுக்குடியிருப்பு,ஜூன்15

முல்லை மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய பிரிவுகளிலிருந்தும் பல பட்டதாரிகள இதில் கலந்து கொண்டனர்.

புதுக்குடியிருப்பிலிருந்து கலந்து கொண்ட 72 பட்டதாரிகளில் ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள பட்டதாரிகளும் பரீட்சிக்கப்பட்டனர் என்று கூறப்பட்டது. (ஐ-353)




# முத்தையன்கட்டு வீதி திருத்தப்படவில்லை

ஒட்டுசுட்டான்,ஜூன்15

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்புப் பிரதான வீதியிலிருந்து முத்தையன்கட்டு இடதுகரையைச் சென்றடையும் வீதி பலவருடங்களாகத் திருத்தப்படாத நிலையிலுள்ளது.

இதேபோன்று, புதுக்குடியிருப்புப் பிரதான வீதியிலிருந்து மன்னார் கணடல் ஊடாகவும் முத்தையன்கட்டு இடது கரை ஊடாகவும் செல்லும் பாதையும் திருத்தப்படாத நிலையில குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால், போக்குவரத்திற்குப் பெரும்சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது எனவும் கூறப்பட்டது.(4-341)

# 2 லட்சம் வெடிப் பொருள்கள் மீட்பு!

ஒட்டுசுட்டான்,ஜூன்15

வன்னிப்பிரதேசத்தில் கடந்த 5 வருடங்களில் சுமார் 2 லட்சம் வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாக மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

கடந்த 1999ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு மே 20ஆம் திகதிவரை 98 ஆயிரத்து 110 மிதிவெடிகள், 104 வாகன வெடிபொருள்கள் மற்றும் 86 ஆயிரத்து 91 வெடிக்கும் நிலையிலுள்ள வெடிபொருள்கள் அடங்கலாக சுமார் 2 லட்சம் வெடி பொருள்கள் மனிதநேயக் கண்ணி வெடி அகற்றும் பிரிவினரால் இவ்வாறு மீட்கப்பட்டிருக்கின்றன என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4-ரி-341)

## பூநகரிப் பிரதேச மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை

பூநகரி,ஜூன்15

பூநகரிப் பிரதேசப் பாடசாலை மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் கடந்த 15 நாள்களாக நடைபெற்று வருகின்றன.

இதில் கண்பரிசோதனை, பல் பரிசோதனை என்பன நடைபெற்று வருவதுடன் ஏற்பூசி, ஜேர்மன் சின்னமுத்துத் தடுப்பூசி என்பனவும் ஏற்றப்பட்டு வருவதாக பூநகரிப் பொதுச் சுகாதார பரிசோதகர் சந்திரசேகரன் தெரிவித்தார். (4-403)






முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், கூழாமுறிப்புக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. சுகாதார நிலையத்தின் புதிய பெயர்ப் பலகையையும் திறப்பு விழா வைபவத்தில் கலந்துகொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஜெயகுலராஜா, விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் செல்வம், யு.என்.எச்.சீ.ஆர்.திட்ட முகாமையாளர் ஆனிசெற் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். *(ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

## கண்டாவளையில் சிரமதானம்

பூநகரி,ஜூன்15

சூழல் பாதுகாப்பு மாதத்தினை யொட்டிக் கண்டாவளைப் பிரதேசத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்தின் விவசாயிகள் அமைப்புகள் ஒன்றிணைந்து எதிர் வரும் 20ஆம், 27ஆம், 30ஆம் திகதிகளில் சிரமதானப பணியினை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-ரி-403)

# காலாவதியான பொருள்கள் திடீர் சோதனையில் மீட்பு

சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கின்ற பொருள்களை விற்பனையிலிருந்து தடைசெய்யும் பொருட்டு தருமபுரம், விசுவமடு ஆகிய பிரதேசங்களில் உள்ள பல்பொருள் வாணிப நிலையங்களில் திடீர்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புளியம்பொக்கணை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எஸ்.லெஸ்லி, உருத்திரபுரம் பரிசோதகர் ரி.தவராசசேகரன், பளை பரிசோதகர் வி.இராசதுரை, விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியை சேர்ந்த எஸ்.சற்குணநேசன் ஆகியோர் இணைந்து இந்தப் பரிசோதனையை மேற்கொண்டனர். இதன்போது 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டுள்ளன.

இதில் கடலைப்பருப்பு, அப்பளம், கன்டோஸ் வகைகள் பிஸ்கற் வகைகள், ரின் பால், சோயாமீற் ஆகிய பொருள்களே காலாவதியான நிலையில் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.(4-402)

# மாவட்ட தபால் அத்தியட்சகர் அலுவலகம் முல்லையில் திறப்பு

முள்ளியவளை,ஜூன்15

முல்லை மாவட்டத்தில் தபாற் சேவையினை மீள விரிவுபடுத்தும் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட முல்லை மாவட்டத் தபால் அத்தியட்சகர் அலுவலகம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைக் கடற்புலிகளின் பொறுப்பாளர் ரங்கனும், அஞ்சல் அலுவலகக் கொடியை வடபகுதி அஞ்சல்மா அதிபரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து முல்லை மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் பெயர்ப் பலகையினைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்துவைத்தார். கடற்புலிகளின் பொறுப்பாளர் ரங்கன், தபால் அத்தியட்சகர் குமரகுரு ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். நன்றியுரையினை நுண்ணாய்வுப் பரிசோதகர் நிகழ்த்தினார். (4-321)

# சிறுபோகத்துக்குக் கடன்

ஒட்டுசுட்டான்,ஜூன்15

இவ்வாண்டுக்கான சிறுபோக உணவுச் செய்கைக்குக் கடன் வழங்கும் திட்டத்தில் முல்லை மாவட்டக் கிராமிய வங்கியினால் 60 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரையில் இக்கடனுதவிகள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-341)

## கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

ஒட்டுசுட்டான், ஜூன்15

முல்லை மாவட்டப் பிரதேச செயலகங்களில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்றும் நாளையும் முல்லைப் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுளளது. (4-ரி-341)

## கணனி அன்பளிப்பு

ஒட்டுசுட்டான், ஜூன்15

முல்லை மாவட்ட கட்டப் பகுதி-I வைத்தியசாலைக்குக் கடந்த மாதம 30ஆம் திகதி உலக சுகாதார நிறுவனத்தால் கணனியொன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (4-341)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன் - சமுர்த்தி வங்கிக்கு முன் ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத்தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

யாழ்.பிரதான வீதி மக்கள் வங்கிக்கு அண்மையில், 3ஆம் குறுக்குத தெருவில், 2 பரப்புக் காணியுடன் இரண்டு (02) வீடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேகர், T.P.: 0777 171745 (33067)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளைப பேட்டுக்குஞ்சுகளும் 16.06.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முனகூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச சந்தி, T.P.: 3529, 2867, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.(32999)

### வாடகைக்கு

யாழ்.நகரில் (Town இல்) கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கடை (11'X8') ஒன்று வாடகைக்குண்டு. எல்லா விதமான பாவனைக்கும் உகந்தது. தொடர்பு: 077 7374726 (33025)

### தவறிவிட்டது

மயில்வாகனம் வரதராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.520934979V) 12.05.2004 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 236/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(33072)

வீரமனை குப்பிளான் தெற்கைச் சேர்ந்த சின்னையா தங்கராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.481323452V) முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள ராசம் கொமினிக்கேஷனில் ஒப்படைத்துதவும்.T.P.: 3095(33069)

நாராயணசாமி சதீசன் என்பவருடைய தே.அ.அ. (இல.810715260V) கடந்த 13-06-2004 ஞாயிறன்று பருத்தித்துறை வீதியில் மினிபஸ்ஸில பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை, கடற்கரை வீதியிலுள்ள பிரகாஷ் கொமினிக்கேஷனில் ஒப்படைத்துதவவும்.(சி-35591)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 26 வயது, ரோகினி 2ஆம் பாதம், 8½ பாவம், கனடாவில் நிரந்தர வதிவுடமை உடைய மணமகளுக்கு (தற்போது இலங்கையில் உள்ளார்) பெற்றோர் படித்த, பண்பான மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு இ.உதயராஜ், வரணி வடக்கு, வரணி. (32972)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆயிலிய நட்சத்திரம், 28 வயது, கனடாவில் வசிக்கும் PR உடைய (கொம்பியூட்டர் எஞ்சினியறிங் இறுதிப்பரீட்சை எழுதவுள்ள மணமகனுக்குப் பொருத்தமான, நற்குணமுள்ள, படித்த, அழகிய 5'4" உயரமுள்ள மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2300, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33055)

## அச்சுவேலி தபால் நிலையத்துக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம்

அச்சுவேலி,ஜூன்15

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு இரு மாடிகளைக் கொண்ட நிரந்தரக் கட்டடம் ஒன்று அச்சுவேலி - வசாவிளான் வீதியில் நிறுவப்படவுள்ளது.

இத்தபால் நிலையத்தைக் கட்டுவதற்காக தபால் திணைக்களம் 40 லட்சம் ரூபாவை ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளபோதிலும் கட்டடம் கட்டுவதற்கான காணி இன்னமும் பெறப்படாமையினால் கட்டடம் கட்ட முடியாத நிலையில் இருக்கிறது.

இதேவேளை,

தபால் நிலையம் கட்டுவதற்கான நிதியை திணைக்களம் அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து அதற்குரிய காணியைக் கொள்வனவு செய்ய பொதுமக்களால் வில்லிசை மணி கலாவினோதன் சி.கணபதிப்பிள்ளை (சின்னமணி) தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழு பொது மக்களிடம் நிதியைச் சேகரித்து வருகிறது. இதுவரை 4 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு காணி கொள்வனவுசெய்ய அமைக்கப்பட்ட இக்குழுவினர் அச்சுவேலி - வசாவிளான் வீதியில் 10 லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்ய வீதி ஓரமாக 8 பரப்புக் காணியைத் தெரிவு செய்துள்ளனர்.

காணி கொள்வனவுக்கான நிதி முழுமையாகக் கிடைக்கப்பெற்றதும் அதனைக் கொள்வனவு செய்து தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என அக்குழுவின் தலைவர் கலாவினோதன் கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

அச்சுவேலி தபால் நிலையத்துக்கான காணி கொள்வனவுக்கு பொது மக்கள் பங்களிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (8-173)

### கிராம சேவையாளரின் அலுவலகங்களுக்கு தளபாடங்கள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராம சேவையாளர்களின் அலுவலகங்களுக்கு தளபாடங்கள் வழங்கப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமசேவையாளர்களின் அலுவலகங்களில் தளபாடப்பற்றாக் குறை நிலவுவதை பிரதேசசெயலர் யாழ் அரச அதிபருக்கு எழுத்து மூலம் தெரிவித்ததை அடுத்து, அரச அதிபா தளபாடங்களை வழங்க இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது. (8-180)

## புதிய மாநாட்டு மண்டபம் தொடர்ந்து பூட்டிய நிலையில்

வலி.கிழக்கு,ஜூன்15

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு பல லட்ச ரூபா செலவில் புதிதாக அமைக்கப் பட்ட மாநாட்டு மண்டபம் கடந்த ஒருவருட காலமாகப் பூட்டிய நிலையிலேயே காணப்படுகின்றது.

இந்த மாநாட்டு மண்டபம் சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன புதிதாகக் கட்டப்பட்டது.

கடந்த ஒருவருடத்திற்கு முன்பே கட்டடத்தின் கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ள போதிலும் தொடர்ந்து பூட்டப்பட்டே உள்ளது

இதற்கான காரணம் என்னவென்று தெரியாதிருப்பதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது தெரிவிக்கப்பட்டது. (8-180)

## சுற்றுச்சூழல் அபிவிருத்தி குறித்து செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட சூழல் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.செயலகத்தில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கட்டாக்காலி மிருகங்களால் ஏற்படும் பிரச்சினைகள், உணவகங்களிலும் விடுதிகளிலும் ஏற்படும் பிரச்சினைகள், திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரசசினைகள், மரநடுகை, சட்டபூர்வமற்ற இறைச்சி விற்பனை, சட்டவிரோதமாக மதுபான விற்பனையுடன் கள், கசிப்பு போன்றவற்றால் சூழலுக்கு ஏற்படும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர், பொலீஸ் அதிகாரி, யாழ்.மாநகர சபை ஆணையாளர் மற்றும் சூழல் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட வேறு சில அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (4-ரி)

அழகிய நினைவு மலர்களுக்கான படங்களைப் பெற்றுக்கொள்வதற்கு.
கூல் லெமனேசன் படங்களுக்கு.
பிள்ளையார் அச்சகம். நல்லூர்.
ஐயர் வளவு மூத்தவிநாயகர் கோவிலடி.
கரணவாய் தெற்கு.

# சேவை நலன் பாராட்டும் அறுபதாவது பிறந்த தின வாழ்த்தும்

## திரு.டானியல் முருகேசு வேதாபரணம்

(கிராம அலுவலர், கரவெட்டி வடக்கு)



எமது கரவெட்டி வடக்குப் பிரதேசத்தில் கடந்த15 வருடகாலமாக கிராம அலுவலராகக் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் எமது கிராம அலுவலர் திரு.டானியல் முருகேசு வேதாபரணம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்றைய அவரது அறுபதாவது பிறந்த தினத்தில் அவரை மேன்மேலும் சீருஞ் சிறப்பும்பெற்று வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

~கரவெட்டி வடக்கு வாழ்மக்கள்.

(33070)(32-16-19)

Swan
சுவான் டீசல் என்ஜின்

- நம்பிக்கையில் தலைசிறந்தது!
- 4 ஸ்ரோக் என்ஜின்
- தற்போது 9.5 H/p சக்திவரை கிடைக்கிறது
- உதிரிப்பாகங்கள் உண்டு



அதிஉயர் விற்பனைக்குப் பிந்திய சேவையும் உண்டு

Access Graphics

ஏக முகவர்கள்:
சென்ட். அந்தனீஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டெட்.
524. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை. கொழும்பு 10.
தொலை: 2324261-5. 2337283-5 .பெக்ஸ்: 2446554

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
15-01-1945

மண்ணின் மடியில்
16-05-2004

## அமரர் சண்முகம் குணசிங்கம்

(மிருதங்க வித்துவான்)

எங்கள் குலவிளக்கே! "குணமெ"ன்னும் குணக்குன்றே!
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து, வையத்துள் வாழும் நெறிகாட்டி,
அன்புக்குரிய எமையெலாம் ஏங்கித் தவிக்க வைத்து,
அரனடி சென்றடைந்தீர்! அங்கு பெறுக பேரின்பம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி அஞ்சலி செய்த அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- துணைவியார்,
குடும்பத்தினர்.

யார்வத்தை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(சி-35594) (26-21-11-1)

# யாழ். மாவட்ட தடகளப் போட்டிகளில் நான்கு சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன

வலி.வடக்கு,ஜுன்15

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வின்போது நான்கு சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகர் பிரதீப்குமார் 13.34 மீற்றர் தூரம் எறிந்ததன்மூலம் கடந்த 21 வருடங்களாக இருந்து வந்த சாதனையையே முறியடித்துப் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

கடந்தாண்டில் இவர் மாகாண மட்டப் போட்டியில் 12.96 மீற்றர் தூரம் எறிந்து மாகாண மட்டத்தில் சாதனை புரிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1972ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பி. புவிராஜசிங்கத்தின் 12.71 மீற்றர் தூரம் என்ற சாதனையே இவரினால் இம்முறை முறியடிக்கப்பட்டுள்ளது.

110 மீற்றர் தூரம் தடைதாண்டல் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.ரஞ்சித்குமார் 15.6 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் 2003 ஆம் ஆண்டில் 16.2 செக்கன்களில் ஓடிய தனது சாதனையை மீண்டும் முறியடித்துள்ளார்.

100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி செ.துயாளினி 17.8 செக்கன்களில் ஓடி புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

2003ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி செ.குகாயினி 18.9 செக்கன்களில் ஓடி ஏற்படுத்திய சாதனையை இவர் முறியடித்துள்ளார்.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி க.சேதுப்பிரியா 28.96 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இவர் 2003ஆம் ஆண்டில் நெடுந்தவுப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த செல்வி ந.கருணைகலாதேவி 28.74 மீற்றர் தூரம் எறிந்து ஏற்படுத்திய சாதனையை முறியடித்துள்ளார்.

இவ்வாண்டும் செல்வி ந.கருணைகலாதேவி தனது முன்னைய சாதனையை 29.85 மீற்றர் தூரம் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்தியபோதிலும் அடுத்த சில நிமிடங்களில் செல்வி க.சேதுப்பிரியா இச்சாதனையை முறியடித்து புதியசாதனையை ஏற்படுத்திக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (-10-86)



நேற்றுமுன்தினம் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில் மாணவர்கள் பங்கேற்பதைப் படத்தில் காணலாம்.

(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)

## முரளி 'தூஸ்ரா' பந்துவீச்சைத் தொடர்வதற்கு கிரிக்கெட் விதிகளை மாற்றக்கூடாது

### ஆஸி. அணியின் முன்னாள் வீரர் தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்15

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் சர்ச்சைக்குரிய 'தூஸ்ரா' பந்துவீச்சு முறையைத் தொடர்வதற்காக கிரிக்கெட் விதிகளை மாற்றும்படி இலங்கை விடுத்த கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், கிரிக்கெட் தெரிவாளருமான பீற்றர் டெய்லர் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முரளிதரனது 'தூஸ்ரா' பந்துவீச்சு முறை தற்போதைய கிரிக்கெட் விதிகளுக்கு உட்பட்டதாக அமைய வில்லை என்பது ஆய்வுகளிலிருந்து தெரியவந்ததையடுத்து, அந்தப் பந்துவீச்சு முறையை ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு கிரிக்கெட் விதிகளில் மாற்றத்தைக் கொண்டு வருமாறு 'ஸ்ரீலங்கா கிரிக்கெட்' சர்வதேச கிரிக்கெட் சபையைக் கேட்டிருந்தது.

தற்போதுள்ள முறையில் ஆய்வு கூடங்களில் இது குறித்து பரிசோதனைகளை நடத்துவதனைவிட முன்னைய காலத்தைப் போன்று, நடுவர்களே பந்தை எறிபவர்களை அடையாளங் கண்டு அதனை நோபோல் (No Ball) என அறிவிக்கவேண்டும்.

இதன் மூலம் கிரிக்கெட்டின் மிகப் பெரும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் இக்கோரிக்கையை ஏற்றுக் கிரிக்கெட் விதிகளை மாற்றுவதென்பது ஓர் அழிவிலிருந்து இன்னோர் அழிவை நோக்கிச் செல்வதாக அமையும் என்றும் டெய்லர் தெரிவித்துள்ளார். (-10-5)

## பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் பரு.பிரதேச செயலகம் முதலிடம்

வலி.வடக்கு,ஜுன்15

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகம் சம்பியனாகியுள்ளது.

இரண்டாவது இடத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகம் பெற்றுக்கொண்டது.

தடகள விளையாட்டுப் போட்டிகளில் பிரதேச செயன் பிரிவு ரீதியாக பெற்ற புள்ளிகளின் விபரம் வருமாறு:

ஆண்கள் பிரிவு

சங்கானை 2, ஊர்காவற்றுறை 3, மருதங்கேணி 5, கோப்பாய் 6, சாவகச்சேரி 13, நல்லூர் 14, கரவெட்டி 15, யாழ்ப்பாணம் 16, பருத்தித்துறை 17, தெல்லிப்பழை 34, சண்டிலிப்பாய் 34.

பெண்கள் பிரிவு

நல்லூர் 2, நெடுந்தீவு 9, வேலணை 9, சாவகச்சேரி 9, யாழ்ப்பாணம் 11, உடுவில் 12, சங்கானை 14, பருத்தித்துறை 39, தெல்லிப்பழை 39, சண்டிலிப்பாய் 50.

விளையாட்டு

இவ்வாண்டுக்கான மாவட்டத்தின் சிறந்த தடகள வீரராக தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ரஞ்சித்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் தட போட்டிகளில் 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 15.6 செக்கன்களில் ஓடியும், களநிகழ்வில் நீளம்பாய்தலில் 6.52 மீற்றர் தூரம் பாய்ந்தமைக்காகவும் இவ்வாண்டுக்கான சிறந்த தடகள வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிறந்த தட வீராங்கனையாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.துயாளினி 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் 28.9 செக்கனில் ஓடியமைக்காகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த கள வீராங்கனையாக யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சி.வாசுகி நீளம் பாய்தலில் கூடிய தூரம் பாய்ந்தமைக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (-10-86)

## ஐரோப்பிய கிண்ணப் போட்டியின் முதலாவது போட்டியில் போர்த்துக்கல் அதிர்ச்சித் தோல்வி

போர்டோ,ஜுன்15

ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் யாரும் எதிர்பாராதவிதமாகப் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் அணி 1-2 என்ற கோல் கணக்கில் கிரீஸ் நாட்டு அணியிடம் தோல்வியுற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் முதல் பாதியின் 6ஆவது நிமிடத்திலேயே முதல் கோலை அடித்து முன்னிலை பெற்றது கிரீஸ். எதிர் அணியினர் தவறாக அனுப்பிய பந்தைச் சாதகமாக்கிக்கொண்ட கிரீஸின் வீரர் ஜியார்ஜியாஸ் கரா கௌனிஸ், பந்தை வேகமாக அடித்துச் சென்று கோலாக்கினார்.

அதைத் தொடர்ந்து கிரீஸ் அணி தடுப்பாட்டத்தில் ஈடுபட்டு போர்த்துக்கல் அணிக்கு கோல் வாய்ப்புக் கொடுக்காமல் செயற்பட்டது.

இரண்டாவது பாதியில் தொடக்கத்தில் கிடைத்த பனால்டி வாய்ப்பை கோலாக்கினார் கிரீஸின் ஏஸ் சலாஸ் பாசிலாஸ்.

ஆட்டம் முடியும் நேரத்தில் போர்த்துக்கல் அணி வீரர் கிரிஸ்டியானோ ரொனால்டோ தலையால் அடித்த கோல், குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான ரசிகர்களுக்கு ஆறுதலை மட்டுமே அளித்தது.

போர்த்துக்கல் அணியின் பயிற்சியாளர் லூயிஸ் பெலிப் ஸ்கொலாரி, போட்டியின் இடையே செய்த மாற்றங்கள், உத்திகள் எதுவும் எடுபடவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உலகக் கோப்பையை வென்ற பிரேசில் அணியின் பயிற்சியாளராக ஸ்கொலாரி இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)



### மெய்வன்மைப் போட்டி

சங்கானை,ஜுன்15

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.இரத்தினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சார சபை மின் அத்தியட்சகர் பொ.சண்முகநாதசிவமும், சிறப்பு விருந்தினராகக் கு.வி.கந்தசாமியும் கலந்துகொள்ளவுள்ளனர். (-10-ரி)

### கே.சி.சி.சி. கிண்ண கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம்,ஜுன்15

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மேற்படி போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (10-6)

### கரும்புலிகள் நினைவுதின உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜுன்15

தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப்பிரிவு மற்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மருதங்கேணி விளையாட்டுக் கழகமும் றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும்

மாலை 4.30 மணிக்கு சிவானந்தா விளையாட்டுக் கழகமும் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (10-ரி)

## ஆஸி. டெஸ்டில் முரளி ஆடுவதை 82 வீத ரசிகர்கள் விரும்பவில்லை

### 'சண்டே ரைம்ஸ்' கருத்துக்கணிப்பு

கொழும்பு,ஜுன்15

ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 20 ஆம் திகதி ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ள இலங்கை கிரிக்கெட் அணியில் முரளிதரன் இடம்பெறுவாரா என்பது இன்றுவரை கேள்விக்குறியாகவே இருந்துவருகின்றது.

மிகவும் நம்பிக்கைக்குரிய வட்டாரத் தகவல்களின்படி இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில் கலந்துகொள்வதில்லை என்று அவர் பெரும்பாலும் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதனிடையே இலங்கையில் பெருமளவில் விற்பனையாகும் பத்திரிகைகளில் ஒன்றான 'த சண்டே ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட கூப்பன் மூலம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு முடிவுகளின்படி ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயணத்தை முரளிதரன் புறக்கணிப்பதைப் பெரும்பாலான வாசகர்கள் ஆதரிப்பதாகத் தெரியவந்துள்ளது.

இக்கருத்துக் கணிப்பின் முதலாவது வாரமுடிவின்படி வாசகர்களில் 82 வீதமானவர்கள் ஆஸ்திரேலிய டெஸ்ட் போட்டிகளில் முரளிதரன் கலந்துகொள்ளக் கூடாதெனத் தெரிவித்துள்ளனர். (-10)

## நியூஸிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி வெற்றி கொண்டது

டென்ட்பிரிட்ஜ்,ஜுன்15

நியூஸிலாந்து அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையேயான கடைசி மற்றும் 3 ஆவது டெஸ்ட் போட்டியிலும் வெற்றியீட்டியதன் மூலம் இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இதில் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 384 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்துத் தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 319 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தது.

இதையடுத்து, 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி 3 ஆவது நாள் ஆட்ட நேரமுடிவில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் எடுத்திருந்தது. 4 ஆவது நாள் ஆட்டத்தின்போது இங்கிலாந்து வீரர்களின் பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்கமுடியாமல் 218 ஓட்டங்களில் சுருண்டது அந்த அணி.

அந்த அணியில் ரிட்ச்சர்ட்சன் 49 ஓட்டங்களும் பிளமிங் 45 ஓட்டங்களும் மக்குலம் 39 ஓட்டங்களும் எடுத்தனர். இங்கிலாந்து தரப்பில் ஜைல்ஸ் 4 விக்கெட்டுக்களும் ஹார்மிசன், சாகர்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களும் எடுத்தனர்.

289 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து அணி 71.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணியின் வீரர் தோர்ப் அபாரமாக ஆடி சதம் அடித்தார். அவர் 13 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார். டிரச்சர் 59 ஓட்டங்களும் ஜைல்ஸ் 36 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து டெஸ்ட் தொடரை 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. ஏற்கனவே, அந்த அணி முதல் இரு போட்டிகளிலும் வெற்றிபெற்றிருந்தது.

ஆட்டநாயகனாக தோர்ப் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்நாயகன் விருது இங்கிலாந்து வீரர் ஹார்மிசனுக்கும், நியூஸிலாந்து வீரர் ரிச்சர்ட்சனுக்கும் வழங்கப்பட்டது. (-10)

# தமிழினம் தன்னாட்சி பெறவேண்டும் என்பது கந்தமுருகேசனாரின் தாகமாகும்

## அதனைப் பூர்த்திசெய்ய நினைவுதினத்தில் வலியுறுத்து

வடமராட்சி,ஜூன்15

தமிழினம் தன்னாட்சி பெறவேண்டும் என மூதறிஞர் கந்தமுருகேசனாா பெருந்தாகம் கொண்டிருந்தார். அவரது தாகத்தை முன்னெடுத்துச் சென்று பூர்த்தி செய்யவேண்டியது பெரியோாகள், சான்றோர்கள் கடமையாகும் - என்று பண்டிதர் வீ.பரந்தாமன் வலியுறுத்தினார்.

புலோலியூர் மூதறிஞர் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனாரின் 39 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மந்திகைச் சந்தி கந்தமுருகேசனார் சிலையடியில் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை யாழ். செயலக தலைமை அலுவலக உதவி அரச அதிபர் வீ.வீரபத்திரப்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் அ.நடராசா ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

பண்டிதர் வீ.பரந்தாமன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மூதறிஞர் கந்தமுருகேசனார் எனக்கு குருவாக விளங்கியவர். அவரது பாரம்பரியத்தில் கடைசி ஆள நானாகத் தான் இருக்கமுடியும். தமிழ்மொழியையும் தமிழ்ப்பண்பாட்டையும் வளர்க்க அவர் பெரிதும் உழைத்தார்.

நடமாடமுடியாத நிலையிலும் அவா திண்ணைப் பள்ளியை நடத்தி பாலர் முதல் முதியவர் வரைக்கும் கல்வி கற்பித்து புலவர் ஒளி என்ற புலோலியின் பெயரைத் தக்கவைத்தவராக விளங்கினார். அவரிடம் படித்தவர்கள நல்ல பதவிகளோடும் நல்ல வாழ்வோடும் இருக்கிறார்கள்.

கந்தமுருகேசனார் செய்த பணியை அவர் பெயரில் தொடர்ந்து வளர்த்து எடுக்கவேண்டும். அன்னார் ஆற்றிய கல்விப் பணியை நிலைநிறுத்த மணிமண்டபம், நூல் நிலையம் கட்டப்பட வேண்டும். அப்போதுதான் அவர் பணி தொடரக்கூடியதாக இருக்கும் - என்றார்.

### சட்டத்தரணி

சட்டத்தரணி இ.உருத்திரா பேசுகையில்:-

மூதறிஞரின் ஞாபகார்த்தமாக புலமைப் பரிசில் வழங்குவதற்கென 50 ஆயிரம் ரூபா யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கி வைப்பிலிடப்பட்டுள்ளது. தற்போதைய வட்டி வீதம் போதாமையினால் ஒரு மாணவனுக்கு புலமைப்பரிசில் வழங்க அந்நிதி போதாமல் உள்ளது. ஆதலால் நிதியத்தில் உள்ள நிதியை மேலும் ஒரு மடங்கு அதிகரிக்க நாம் அனைவரும் பங்களிக்கவேண்டும். நிதி அதிகரிக்கப்பட்டாலேயே புலமைப் பரிசில் சாத்தியமாகும் - என்றார்.

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா பேசுகையில்:-

கந்தமுருகேசனாரைப் பற்றி நான அறிந்தது குறைவு. ஆனால், அவரிடம் படித்த மன்னவன் கந்தப்பு, கரவைக் கிழார் உட்பட பலருடன் நான உரையாடியபோது அவரது கீர்த்தியை, மகிமையை, புலமையை தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. கந்தமுருகேசனாருக்கு நிகர் அவரேதான். அவர் விட்டுச் சென்ற பணியை மேல் நோக்கி எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு எங்களுடையதாகும். அவரது நினைவாக மணிமண்டபம், நூல்நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது. இவற்றிற்கு இப்பகுதி உள்ளூராட்சி மன்ற அலுவலகம் செய்ய வேண்டிய பணிகளை எதிர்காலத்தில் செய்யும் - என்றார்.

### கடற்றொழில் பரிசோதகர்

இளைப்பாறிய யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்கள, மாவட்டப் பரிசோதகர் சு.கதிர்காமத்தம்பி பேசுகையில்:

மூதறிஞரின் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை அதிகரிக்க வெளிநாடுகளில் வாழும் புலோலி வாசிகளின் உதவிகளைப் பெற்று அதிகரிக்க வேண்டும். அடுத்த பரம்பரை மாணவர்களுக்கும் இந்நிதியம் சேர வேண்டும் - என்றார்.

### வைத்திய அதிகாரி

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் பேசுகையில்:-

மந்திகையில் பொதுநூலகம், வைத்தியசாலை, சந்தை, அரச திணைக்களம் என்பன அமைந்துள்ள பகுதியில் கந்தமுருகேசனார் சிலை அமைந்துள்ளதால், சிலை அமைந்துள்ள இப் பகுதியை 'கந்த முருகேசனார் சதுக்கம்' எனப் பெயரிட்டு அதற்குரிய வளைவுகளை அமைக்க வேண்டும் "- என்றார்.

### எழுதுவினைஞர்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை எழுதுவினைஞர் எஸ்.பூபாலசிங்கம் பேசுகையில்:-

மூதறிஞரிடம் நான் கடைசி மாணவனாக பாலர் வகுப்பில் கற்றேன். அவர் எம்மைக் கண்டிக்கும்போதெல்லாம் விரல் நகத்தில் கிள்ளுவார். அவரிடம் படித்த பண்டிதர்களும் பல்கலைக்கழக பட்டதாரிகளும் அக்காலத்தில் அவரிடம் வந்து செல்வார்கள் அவர்களது நகங்களும் கிள்ளுவதற்கு விதிவிலக்கல்ல.

கோபத்திலும்சந்தோசத்திலும் மாணவ்ர்களினது நகத்தைக் கிள்ளு வது அறிஞரின் பண்பாகும்.

மந்திகைச் சந்தியில் உள்ள அன்னாரின் சிலையைக் கடந்து செல்லும் போதெல்லாம் அன்னார் வாழ்ந்த திண்ணைப்பள்ளி இருந்த இடத்தில் ஒரு சிலை அன்னாருக்கு அமையவில்லையே என நான் வேதனைப்படுவேன. ஆதலால், அவர் வாழ்ந்த திண்ணைப் பள்ளி நடத்திய இடத்தில் அன்னாருக்கு ஒரு சிலை நிறுவ அனைவரும் முன்வரவேண்டும் என்றார்.

### நூலகர்

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை நூலகர் லோகேந்திரலிங்கம் பேசுகையில்:-

இன்றைய நாளில் மூதறிஞர் எழுதிய நல்லை நாவலன் சேவையை அனைவரும் ஒருமுறை படித்துப் பார்க்க வேண்டும். பெரிய தேவனத் தாய் சனசமூக நிலையம் அவர் வாழ்ந்த, கற்பித்த இடத்தில் அன்னாரின் சிலை ஒன்றை நிறுவ முயற்சி செய்து வருகிறது. அவை வெற்றி பெற அன்னாரின் ஆத்மா எங்களுக்கு எப்போதும் உதவும் என்றார்.

ஆரம்பத்தில் மந்திகைச் சந்தியில் உள்ள மூதறிஞரின் சிலைக்கு யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா, பிரபல எழுத்தாளர் புலோலியூர் கே.தம்பையா, பருத்தித்துறை பிரதேச சபைச செயலாளர் அ.நடராசா, வர்த்தகர் கே.நடராசா, வடமராட்சி வலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி, இளைப்பாறிய பொறியியலாளர் செ.கதிர்காமநாதன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனா.

இந்நினைவு தினத்தை ஒட்டி பருத்தித்துறை பிரதேச சபை பொது நூலகத்தில் மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டன. (அ-173)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்15

யாழ்.மாவட்டப் ப.நோ.கூ.சங்கங்கள் தமக்குரிய உலர் உணவு விநியோகத்துக்கான வழங்கல் கட்டளைகளை யாழ் செயலகப் புனர் வாழ்வுப் பகுதியில் பெற்று, ஓரிரு தினங்களில் நிவாரண விநியோகத்தை மேற்கொள்ளுமாறு செயலக திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ஒ-4)


## வேலை வாய்ப்பு

சாவகச்சேரி நகரில் நவீன வடிவமைப்பில் இயந்திர சாதனங்களுடன் உருவான வெதுப்பகத்துக்குப் பணியாளர்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- பேக்கரி பணியாளர்கள
- விற்பனையாளர்கள
- பொதி செய்பவர்கள

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

பைந்தமிழ் வெதுப்பகம்,
இல.232, கண்டிவீதி, சாவகச்சேரி.
T.P.No: 0712347462

18-06-2004 ஆம் திகதிக்குமுன் நேரில் வரவும்

(33084)(32-13-14)

## இந்திய பரம்பரை ஜோதிடர்





அருள் வாக்கு
அம்பிகா அம்மா

மீண்டும் யாழ். மக்களின் விருப்பத்திற்கு இணங்க யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும்
உங்கள் வாழ்வில் வெற்றியும், சுபீட்சமும் அடையவும் வியாழ மாற்றப் பலன்களை அறிந்துகொள்ளவும்.

**அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்**

*அம்மாவைச் சந்திக்கும் இடம்:*
அருள்வாக்கு அம்பிகா அம்மா,
121, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (முன்பு இருந்த அதே பழைய இடம்),
ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.

(33074)(13-14-32)

## தேவை

தையல் வேலைகளில் அனுபவமுள்ள ஆண்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆகாஷ் ரெயிலரிங்
19,கண்டி வீதி
சாவகச்சேரி.

(சி35597)(37)

## விற்பனைக்கு

சகல தேவைகளுக்கும் பயன்படக்கூடிய தொலைபேசி இணைப்பு விற்பனைக்கு உண்டு (IDD உடன்)

தொடர்புகளுக்கு:
021 4590024
மாலை 5.30 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்.

(33086)

## சிறுவர் அரங்கு
## Children's Theatre



(புதிய பயிற்சிப் பிரிவு ஆரம்பம்)

செயல்திறன் அரங்க இயக்கம் புதிதாக ஆரம்பிக்கவுள்ள சிறுவர் அரங்கப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சிக்காலம் - நான்கு மாதங்கள் (கிழமை நாள்களில் விரிவுரைகள் நடைபெறும்)
- பயிற்சி முடிவில் சிறப்பாகத் தேர்ச்சிபெறுவோர் தொழில்சார் ஆற்றுகையாளர்களாக இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.
- பாடவிதானம்
  - ★ சிறுவர் நாடக எழுத்துருப் படைப்பாக்கம்.
  - ★ நடிகருக்கான அடிப்படைப் பயிற்சி
  - ★ சிறுவர் நாடகத் தயாரிப்பு

எதிர்பார்க்கப்படும் தகுதி
1. க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 20 – 30
3. நாடகமும் அரங்கியலும் பாடத்தில சித்தி, அனுபவம் விசேட தகுதிகளாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: **20.06.2004**

தொடர்பு முகவரி: **செயல்திறன் அரங்க இயக்கம்**
Active Theatre Movement
'அருளகம', ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(சி-35595)(13-14-32)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 01 |  | 29 |
| 09 | | 06 |
| 1937 | | 2003 |

நெடுந்தீவு
**அமரர் இராமநாதர் ஆறுமுகம்**
*(ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்)*

அன்புக்கோர் அணிகலனாய் பண்புக்கோர் இருப்பிடமாய்
பாரினிலே வாழ்ந்து மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு
ஈண்டு எமது நெஞ்சங்களில் நிறைந்தே இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி வள்ளியம்மை,
இளமுருகன், ஞானகரன், கஜேந்திரன்
(பிள்ளைகள்)
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்
சகோதரர்கள்: இராசரத்தினம்,
தர்மலிங்கம், கதிரவேலு.

*82/10, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*(கனடா) -T.P:0060293101753*
*(இந்தியா) 00919443427419*

(33085)(37-13-14-32)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம் கந்த ஞானியார்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

"தாமோதரவாசா" சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோயிலடி மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம் கந்தஞானியார் அவர்கள் 14.06.2004 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் பஞ்சாட்சரமூர்த்தி கந்த ஞானியார் (ஓய்வுபெற்ற உப தபாலதிபர், மாதகல்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் -செல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான ஞானியார் கோயிலடி, அராலி மேற்கு பஞ்சாட்சரமூர்த்தி - சிவானந்தம் தம்பதியினரின் அன்பு மருமகளும் பஞ்சாட்சர ஞானியார் (கனடா), Dr.இளங்கோ ஞானியார் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஞானசுகந்தி, ஞானசெல்வி (ஆசிரியை, அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும் சிவலக்சுமி (கனடா), சுமதி (ஆசிரியை,பண்டதரிப்பு இந்துக் கல்லூரி), செல்வராஜன் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம்), விநாயகமூர்த்தி (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (மலேஷியா), சுப்பிரமணியம் (கணக்காளர்), வைத்திலிங்கம் மற்றும் தண்டிகை நாச்சி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), வள்ளியம்மை (ஓய்வுபெற்ற ஆசிரியை), முத்தீஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானலக்சுமி, ஞானலாகரி, ஞானலாவணி, ஞானமதூரி, கதிர்ஞானியார், செல்வலக்சுமி, சுபலக்சுமி, சனந்தன் ஆகியோரின் பேர்த்தியும் உசாதேவி, சறோஜாதேவி, குணரட்ணம், புவன், பவன், நவன், இந்துஜன் ஆகியோரின அன்பு மாமியாரும் பிரபா (கனடா), டிவாகரி (கனடா), றஜிதாகரி (கல்வியியற கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பெரிய தாயாரும் மலேஷியாவைச் சேர்ந்தவர் களான செம்மணச்செல்வி, மனோன்மணிசிவம், தையல்நாயகி, Dr.சிவஞா னசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் யாழ்ப்பாணம், நீராவியடி சேனாதிராஜா - மகாலக்சுமி தம்பதிகளினதும், திக்கம், அல்வாயைச் சேர்ந்த தங்கராஜா - கணேசம்மா தம்பதிகளினதும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகபூஷணியம்மா தம்பதிகளினதும் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (15.06.2004) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பிள்ளையார் கோவிலடி, மாதகலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பஞ்சாட்சர ஞானியார்
Dr. க.இளங்கோ ஞானியார்

*பிள்ளையார் கோவிலடி,*
*மாதகல்.*
*T.P 0777 283756*

(33089)(40-13-14-32)

## விபத்தில் நால்வர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்15

வான் - மோட்டார்சைக்கிள் மோதிக் கொண்ட விபத்தில் இரு சிறுமிகள் உட்பட நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.-

வட்டக்கச்சி 3 ஆம் வாய்க்காலடியில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார்சைக்கிளில பயணம் செய்தவர்களான அதேயிடத்தைச் சேர்ந்த எஸ்.சிவச்செல்வன் (வயது 24), அழகேந்திரம் - மோகேஸ்வரன்(வயது 33) இவரது பிள்ளைகளான மோ.கஜிந்தா (வயது - 9) மோ.வசந்தா (வயது- 04) ஆகியோரே தலையிலும், கால்களிலும் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் யாழ்.போதனவைத்திய சாலையில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-13-15)

# சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை மேற்கு விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வரர் ஆலய (சிவன கோயில்) வருடாந்தப் பெருந் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா இம்மாதம் 24 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா ஆனி உத்தர நாளான வெள்ளிக் கிழமையும் நடைபெறும். (அ)

★ ★ ★ ★

ஆனைக்கோட்டை, காசிகாண்ட மடம் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயில் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும், நவோத்தர சங்காபிஷேகமும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. காலை 7 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு மாகேசுவர பூசையும் நடைபெறவுள்ளது.

(10-ரி)

யாழ்ப்பாணம்,ஜூன்15

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வ. லிங்க மகாகணபதி கோயிலின் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) வருடாந்த அலங்காரப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

(10-ரி)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்15

ஏழாலை, புங்கடி அம்பலவாணேஸவரர் திருக்கோயில் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (10-ரி)

★ ★ ★ ★

கந்தரோடை,ஜூன்15

கந்தரோடை வற்றாக்கைப் பதி ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமிகள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பதினொரு தினங்கள் நடை பெறவுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (10-ரி)

★ ★ ★ ★

தென்மராட்சி,ஜூன்15

கைதடி இணுங்கித்தோட்டம் கந்தசாமி ஆலய லட்சார்ச்சனை இன்று தொடக்கம் தொடர்ந்து ஆறுதினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும்.

(ஒ-117)

# கனடா சைவமன்றத் தலைவருக்குப் பாராட்டு

காரைநகர்,ஜூன்15

கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் க.விஸ்வலிங்கத்துக்கு பாராட்டுவிழா ஒன்று நாளை புதன் கிழமை காலை 8 மணிக்கு காரைநகர் டாக்டர் ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பாராட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை காரைநகர் மணிவாசக சபையும் டாக்டர் ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயமும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெறும் இப்பாராட்டு விழாவில் ஆசியுரையை நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் மற்றும் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகியோரும்- வாழ்த்துரையை காரை சைவ மகாசபை தலைவர் க.தில்லையம்பலம் மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

(ஒ-9-73)

## கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரியின் ஆசிரியை*

**திருமதி கிருஷ்ணானந்தி செல்வராஜா**

அவர்களின் தந்தை

**திரு.பொன்னம்பலம் இராசரத்தினம்**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர்ப்பூக்களை அஞ்சலியாக்குகின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/இராமநாதன் கல்லூரி.*
*மருதனார்மடம், இணுவில்.*

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
கல்வி சாரா ஊழியர்கள்.

*(33088)(37-36-12-17)*

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



ஆண்டவன் அடியில்
16.05.2004



**அமரர் வல்லிபுரம் அருணாசலம்**

(ஓய்வுபெற்ற உதவியாளர்,
யா/வேலாயுதம் - மகா வித்தியாலயம்)

என் அன்பின் அப்பாவே....!
நீங்கள் மரணித்த செய்தி அறிந்து கலங்கினேன்
உங்கள் பூதவுடல் கண்டு இறுதிக்கடன் செய்ய
பழைய நினைவுகள் தடைபோட்டன!
மனமோ கல்லாகிவிட்டது அப்பா!
எப்போது அப்பா உங்களைக் காண்பேன்?
எந்தை ஈசன் பாதம் அடைந்தீர்!
என உம் ஆத்ம சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வருந்தும்:
சிரேஷ்ட மகள்: சுசிலா விஜயகுமார்.
(உப அதிபர் யா/மாதனை மெ.மி.த.க. பாடசாலை, பருத்தித்துறை).
அன்புச் சகோதரன்: சி.தவராசா (கண்ணன்) குடும்பத்தினர்.

*அரசடி ஒழுங்கை,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.*

*(33046)(37-36-12-17)*


**லக்சுமி** இணுவில்



ஜனா
அஜித், சிநேகா, ரகுவரன், வையாபுரி, கருணாஸ் நடித்த
(33050) (40)
தினசரி:
11.00, 2.00, 6.30, 09.30 புதிய நேரம்

**நாகம்ஸ்** சுன்னாகம்



டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ்
கில்லி (ரீல்ஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(C35399)(12)

**ராஜா** யாழ்ப்பாணம்



3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா, சித்தார்த், த்ரிஷா நடித்த
ஆய்த எழுத்து
காட்சி நேரம்: 10.30. 2.30. 6.30(பு.நே)
18 ஆம் திகதி முதல்
விக்ரம் நடித்த அருள்
(C/34517)

**நிரஞ்சனாஸ்** சங்கானை



விஜய்,சுவாதி, ரகுவரன் நடித்த
செல்வா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு
GENERAL DOUGHTER
(C-34420)(12)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி காமாட்சி துரையப்பா



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கலாசாலை வீதி, திருநெல்வேலியில் வசித்தவருமாகிய திருமதி காமாட்சி துரையப்பா அவர்கள் 14.06.2004 திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாப்பாணர் துரையப்பாவின் அன்பு மனைவியும் ஐயாத்துரை, கனகமணி, காலஞ்சென்ற செல்வநாயகி, பாலசுந்தரம் (அதிபர், கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்), சிவ பாக்கியம், கெங்கநாயகி (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரது பாசமிகு தாயாரும் வசந்திமதி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், திருஞானசம்பந்தர், உதயகுமாரி (ஆசிரியை , மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), சிவநேசன் (வ.பி.போ.ச.), மஞ்சுளா (லண்டன்) ஆகியோரது அன்பு மாமியாரும் தர்மவதனா, பொன்சத்தியலிங்கம், சாந்தலிங்கம், மதிவதனா, திரு.திருமதி சங்கர் கல்யாணரூபி, திவ்வியசங்கர், திரு.திருமதி சதாநந்தன், திவ்விய தர்சினி, நிலாந்தன் (லண்டன்), நிலக்ஷனா (லண்டன்),சௌமியன் (லண்டன்) ஆகியோரது பாசமிகு பேர்த்தியும் நிருபாட்சன், பரணிபாட்சன், நிசானி, நிலானி ஆகியோரது பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நாளை (16.06.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*(33095)(36-12-17)*

### பிலிப்பையா வரோணிக்கா

(செபஸ்தியம்மா)



யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா வரோணிக்கா கடந்த (08.06.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் - அன்னம்மா ஆகியோரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற ஆசிர்வாதம் - ராசம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிலிப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம்பிள்ளை, அழகரெட்டினம் மற்றும் மெற்றிலம்மா (இந்தியா), நடராசா, கிளாறம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் டேவிட் காலஞ்சென்ற எட்வேட், ராணி (பிரான்ஸ்), பொஞ்சின், செல்லக்கிளி (நோர்வே), பிலிஸ்ரியா (இந்தியா), கிளி (பிரான்ஸ்), அன்ரன் யோசப் (துரைதாஸ் - பிரான்ஸ்), பவுண் (நோர்வே), பவுண்துரை(இந்தியா), அமில் (லண்டன்), றொமில் (நோர்வே) யதீஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோசப்பின், ரெத்தினகிளி, அல்போன்ஸ் (பிரான்ஸ்), சலு வைதாஸ், மேவின் (நோர்வே), கனீசியஸ் (பிரான்ஸ்), தேவி (பிரான்ஸ்), சீலன் (நோர்வே), ஜெனிலா (இந்தியா), காந்தன், குனேகா (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் பாபு, ரமேஸ், டினேஸ், ரதீஸ், கமீல், டேமியஸ், றொசாந், எலீரன், ஜாமினி, தாரணி, அனிடஸ், அல்பன், அருண்சன், டெனோசி, டெனோசன், டெனோல்ற்றன், கிருஸ்ரோ, நிதர்சன், தெரன்லீ, றெனன்ஸ், டென்சிலி, சாளினி, றாஜினி, சமந்தா, பெல்த்மன், சங்கீதா, வினுசன், விஜிதன், றெமாஷா, றெமாஷன், வரோன், சிஷோக், சரன், சச்சின் ஆகியோரின் பேர்த்தியும் பிரவீன் டார்வின், கெயின், சந்தனா, நிறோஜினி, நிறோஜனா ஆகியோரின் பூட்டி யுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.06.2004) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*இல.48, 3 ஆம் குறுக்குத்தெரு,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(33092)(37-12-17-36)

### சிவசம்பு சோதிலிங்கம் (சோதி)



ஏழாலை மேற்கு, கயம்பிளியானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு சோதிலிங்கம் (சோதி) அவர்கள் 12.06.2004 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் சிவசம்பு - காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் ஞானாம்பிகையின் (றஞ்சி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்தையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும றஞ்சித் (சவூதி அரேபியா), சோபா (ஜேர்மனி), சுஜீத், ராஜீவ், லதீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம் பிரபாகரனின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் சாருஜனின் (ஜேர்மனி) அன்புப் பேரனும் தேவலிங்கம், ஜெயகௌரி, ஜெயகுமாரி, விஜயகுமாரி, சுகாகாந்தன் சுகந்தினி (டென்மார்க்) ஆகியோரின் நேசமிகு சகோதரரும் கனகசபாபதி (பஞ்சிகாவத்தை), அருட்சிவம், பரமேஸ்வரன் (பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை), பரமேஸ்வரன் (டென்மார்க்), ஜெயரத்தினம், புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அனனாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15.06.2004 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 2 மணியளவில் தகனக்கிரியைக்காக உசத்தியோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கயம்பிளியான்,*
*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(33079)(40-12-17-36)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமகஹ

## விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆனி 2 ஆம் நாள் (16.06.2004) புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய சுபநன்னாளில் முற்பகல் 10.12 மணி முதல் 12.00 மணிவரையுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

**திரு.திருமதி கந்தசாமி லீலாவதி**
*தம்பதிகளின்*
*கனிஷ்ட புத்திரன்*
*திருநிறை செல்வன்*
**சந்திரசேகரன்**
*அவர்களுக்கும்*



**திரு.திருமதி சதாசிவம் தம்பதிகளின்**
*கனிஷ்ட புத்திரி*
*திருநிறை செல்வி*
**கேதீஸ்வரி**
*அவர்களுக்கும்*

திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று அன்றையதினம் யாழ்.பெருமாள் கோயிலுக்கு முன்பாக உள்ள விநாயகர் ஆலய ரசிகறஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் – 17.06.2004 வியாழக்கிழமை மாலை 4 மணி
மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் 18.06.2004 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு

**தங்கள் நல்வரவை நாடும்:**

திரு.திருமதி சதாசிவம்
காளிகோயிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் வழங்கமுடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம். இதனையே இருவீட்டார் அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

திரு.திருமதி.ஜெகதாஸ் (பழம்)
680/2 கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

*(33090)(37-36-12-17)*

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பித்தனர். பெண் போராளிகளைக் கண்ட கண்ட இடங்களில் வைத்து சோதனையிட முடியாது. அதற்கென குறிக்கப்பட்ட இடத்தில் பெண் பொலீஸார் மட்டுமே பெண் போராளிகளை சோதனையிட முடியும் என்றும் குறிப்பிட்ட அவர்கள், தேவையானால் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் வைத்து பெண் பொலீஸார் தம்மைச் சோதனையிடலாம் என்றும் குறிப்பிட்டனர். அந்த இடத்தில் வைத்து இராணுவத்தினர் பெண் போராளிகளான தங்களைச் சோதனையிட அனுமதிக்கமுடியாது என்றும் அவர்கள் பிடிவாதம் பிடித்தனர்.

இந்நிலையில், இழுபறி ஏற்பட்டு நிலைமை மோசமானது.

பொலீஸாரும் கண்காணிப்புக் குழுவினரும் சம்பவ இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர். பொதுமக்களும் போராளிகளுக்கு ஆதரவாகத் திரண்டனர்; சீருடையினரும் அழைக்கப்பட்டனர்.

போராளிகளுக்கு ஆதரவாகப் பொதுமக்கள் திரண்டு கோஷம் எழுப்பியபோது பதற்றம் அதிகரித்து களேபரம் வெடித்தது.

அங்கு திரண்டிருந்த பொதுமக்களை பொலீஸாரும் இராணுவத்தினரும் அடித்துத் துரத்தினர்.

படையினரின் அட்டகாசத்தில் ஒரு கடை சேதமாக்கப்பட்டது. வான் ஒன்று அடித்து நொறுக்கப்பட்டது. நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர். மேலும் 15 பேர் வரை பாதிப்புற்றனர்.

நான்கு ஓட்டோச்சாரதிகள் சம்பவ இடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.சம்பந்தப்பட்ட பெண் போராளிகளான நிலவரசி (புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறை மகளிர் பிரிவு பொறுப்பாளர்) மற்றும் கவிமணி ஆகிய இருவரையும் கண்காணிப்புக்குழுவினர் பாதுகாப்பாகக் கூட்டிச் சென்றனர். நேற்று மாலை வரை மன்னார் நகரில் பதற்றநிலை நீடித்தது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய இடம்பெயர்ந்த மக்களையும் மீளக் குடியமர்த்துவதற்காக இன்னும் நூறு கோடி ரூபா தேவையாகவுள்ளது. இத்தொகையில் 80 கோடி ரூபாவை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு முன்வந்துள்ளது. தேவைப்படும் மிச்சத் தொகையையும் உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ள அமைச்சின் செயலாளர் ஜயசிங்க முயற்சிகளை மேற்கொள்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த உதவித் தொகை 'ஒன்று சேர்க்கப்பட்ட உதவித் திட்டம்' என்ற செயற்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீளக் குடியமர்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இன்றைய நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஹரீம பீரிஸும் கலந்துகொள்வார்.

(க)

## நிதித்துறையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. பாவனைக்கு உதவாத பொருள்கள் விற்கப்படுவது குறித்து விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் நேரிலோ அல்லது 222 7594 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டோ வழங்குமாறு விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை - உணவுப் பொருள்கள் மட்டுமின்றி மருந்துப் பொருள்களும் காலாவதியாகிய நிலையில் விற்பனை செய்யப்பட்டு வருவது அறியப்பட்டுள்ளதாகவும் -

இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-9)

## உடதலவின்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துவருவதாக சுட்டிக்காட்டினார்.

அதனால், விசாரணை நடத்தும் நடவடிக்கைகளில் இருந்து பிரதம நீதிபதி எரிக் பஸ்நாயக்கா ஒதுங்கிக்கொள்ளவேண்டும் என அனுருத்த ரத்வத்தை சார்பில் சட்டத்தரணி ரெனட் வலலியத்தே கோரினார்.

வாதிகள் தரப்பில் சாட்சியங்களை முன்வைத்த பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ, கோரிக்கைக்கு இணங்க முடியாது என்று தெரிவித்தார்.

சுமார் ஒன்றரை வருடகாலமாக வழக்கை விசாரித்து வரும் நீதிபதிகள் குழுவே தொடர்ந்து விசாரணைகளை நடத்த வேண்டும்

என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நீதிபதிகள் மூவரும் ஏகமனதாக நிராகரித்துள்ளனர்.

(ஒ-9)

## ஜெனரேட்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லப்பட்ட போது முகமாலைச் சோதனைச் சாவடியைத் தாண்டி அதனைக் கொண்டுசெல்ல படையினர் மறுத்துவிட்டனர் என்று விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாக சேவை நடுவப் பணியகத்தின் திட்டமிடல் ஆலோசனைப் பகுதி குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஆளிப் பலகைகள், மின்பிறப்பாக்கியின் தாங்கி, எரிபொருள் கொள்கலன், டீஸல் மற்றும் பல உபகரணங்களையும் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அரசு இல்லங்களைக் கையளிக்காத முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்கு

கொழும்பு,ஜூன்15

தமக்கு முன்னர் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை மீளக் கையளிக்காத முன்னாள் அமைச்சர்கள் 16 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான இறுதி அறிவித்தல்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் -

சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான பத்திரங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன என்றும்-

அடுத்த வாரத்தில் இது தொடர்பான வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் -

அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தவர்கள் பதவி இழக்கப்பட்ட பின்னர், கடந்த இரு மாதங்களாக உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பயன்படுத்திய தண்ணீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி கட்டணங்களை அவர் களிடமிருந்து அறவிடுவதற்கும் அரச நிர்வாகங்கள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதைய அரசின் அமைச்சர்களுக்கு இவற்றை வழங்குவது தொடர்பாக பொதுக் கொள்கை ஒன்றைப் பின்பற்றுவதற்கும், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் வசிப்போருக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை வழங்காதிருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

(ஒ-ரி)

## விசேட கூட்டம்

வலி.வடக்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாச விசேட பொதுக் கூட்டம் இன்று 15 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மீள் குடியமர்வு, உள்ளூராட்சி வாரம், தற்கால அரசியல் நிலையில பொதுமக்களின் பங்களிப்பு போன்ற விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன.

இக்கூட்டத்திற்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட தலா ஐந்துபோரை தவறாது கலந்துகொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் த.நா.போஜன் கேட்டுள்ளார். (ஒ-ரி)


**பெண் வேலையாள்கள் தேவை**

பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் (Food items) தேவை

K.R.S. Food Products

K.K.S.Rood, Kondavil

(தபாற் கந்தோருக்கு முன்பாக).

(சி35596)(37)

**Computer Express**

Institute of Information Technology

Maniam's Building

இல.152/1, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.

0777-222422.

0777-278880.

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணச்சலுகை வழங்குவதில் பெருமையடைகின்றோம.

ஆரம்பம்:

Batch II -13.06.2004

Batch III - 20.06.2004

(சி-35471)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS

324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 20.06.2004 இற்கு முன் நேரில்

MOBILE NET COMPUTER SERVICES MCS

**IIS**

கணனிக் கற்கை நெறிகள்

பிரிவு 3 ஆரம்பம்

19-06-2004

மேற்படி திகதியில் புதிய டிப்ளோமா கணனிக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதால் ஆர்வமுள்ள மாணவர்களிடமிருந்து IIS நிறுவனம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. மாணவர்கள் அலுவகத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். A/L 2004 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிற்கான பிரத்தியேக பிரிவு இது என்பது குறிப்பிடத்தக்கது.

கணனிக்கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

இயக்குநர்

IIS, இல 100 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**MODERN EDUCATION CENTRE**

NELLIADY POINT PERDRO

SPOKEN WITH GRAMMAR

ஆரம்பம்:

நெல்லியடி பிரிவுI

15.06.2004 செவ்வாய் 7.30(பு.நே.)

செவ்வாய், வியாழன் 7.30(பு.நே.)

பருத்தித்துறை பிரிவுI

ஆரம்பம்: 16.06.2004

புதன் 10.30(பு.நே.)

திங்கள் 9.30(பு.நே.)

ஆசிரியர்:

திரு.நிஷந்தன்.

குறிப்பு:-பிரிவுI நெல்லியடிக்கான அனுமதிகள் முடிவுற்றன.

(33068)(17)

**IIS இன் அதிரடி கட்டணச் சலுகை**

Diploma in Information Technology

காலம் : 3 மாதம்

2,500/= மட்டுமே

பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது

இப்பிரிவுக்கு மட்டுமே இக் கட்டணச்சலுகை வழங்கப்படும்.

ஆரம்பம் :

19 / 06 / 2004 பகல் 10.00 மணி

அதிக மாணவர்களின் ஆசை கணனிக் கல்வியைக் கற்க IIS இல் இணைய வேண்டும் என்பதே.

பெற்றோர்கள், கல்வியாளர்களின் வேண்டுகோளிற்கிணங்க, எமது நிர்வாகம் பெற்றோர்களின் பொருளாதார வசதிகளைக்கருத்தில் கொண்டு மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்படி கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

மிகச்சிறந்த ஓர் அடிப்படைக் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் ஆராய்ந்து சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நெறியாகும்.

A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களே !

பரீட்சை முடிவுகள் வெளியாகவுள்ள உங்கள் பொன்னான காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு IIS உடன் இணைந்து கொள்ளுங்கள்

19.06.2004 இல் ஆரம்பிக்கப்பட இருக்கும் எமது 3rd பிரிவுடன் மாணவர்கள் இணைந்து கொள்ளமுடியும்.

இம்மாதம் ஆரம்பிக்கப்பட்ட, ஆரம்பிக்கப்பட இருக்கின்ற டிப்ளோமா கற்கை நெறிகளிற்கு பதிவு செய்துள்ள, பதிவு செய்யவுள்ள மாணவர்களுக்கு மேற்படி கற்கை நெறியினை எவ்வித கட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக கற்க முடியும் .

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

" An *Edexcel* Approved Training Centre "

Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk

Branch: IIS, Nelliyady, Karaveddy T.P No: 021-226 3335


# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா மனோன்மணி

காரைநகர் பெரியமணலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா மனோன்மணி நேற்று (14.06.2004) திங்கட்கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் யாழ்ப்பாணம் அன்னசத்திர ஒழுங்கையைச் சேர்ந்த சின்னராசா அவர்களின் அன்பு மனைவியும் ஆனைப்பந்தி பஞ்சாட்சரம் (கடுக்கன்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு காரைநகர் பெரிய மணல் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியமணல்,*
*காரைநகர்.* (சி-35600)(37-12-17)

தகவல்:
பேரம்பலம் சிவசுப்பிரமணியம்.

## செல்வி சிவலோகநாதன் சுதாஜினி

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சிவலோகநாதன் சுதாஜினி 14.06.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவலோகநாதன் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் சிவாஜினி (ஜேர்மனி), சாமினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகரத்தினத்தின் (ஜேர்மனி) மைத்துனியும் விதுசனின் சிறிய தாயாரும் தியாகராசா காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் நாகலட்சுமி, தியாகரதி ஆகியோரின் மருமகளும் மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற பத்மாவதி, சறோஜினிதேவி, சத்தியசீலன் மற்றும் குகனேசன், சிவனேசன், இரத்தினேஸ்வரன் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2004) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*94/2, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (33096)(37-12-17)

தகவல்:
சி.சிவலோகநாதன் (தந்தை).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.